மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 9 / செப்டம்பர் 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-



## மனிதநேயம் போற்றிய
## தமிழக மீனவர்கள்



நானும் ஒரு நகர்ப்புற நச்சல்தான்

**அருந்ததி ராய்!**



**ஏமாற்றினாரா பாலசுப்ரமணியன் ஆதித்தன்?**

# மதுரை புத்தகக் கண்காட்சியில்

நாள் : 31.08.2018 முதல் 10.09.2018 வரை
இடம் : **மதுரை தமுக்கம் மைதானம்**

பன்மை வெளி




கடை எண்
**40-41**

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை - 600 078

தொடர்புக்கு
044 24742911 - 98408 48594 - 94439 18095

முற்றம்

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

பலம் வாய்ந்தவர்?
- தலையங்கம் ............ 4

ஒப்பந்தத்தை மேதகு பிரபாகரன் ஏற்கவில்லை! மோகந்தாஸ் சொன்னதை வழிமொழியும்
ஃபெரோஸ் அஹமத் ............ 5

இதுதான் கதி............ 7

நானும் ஒரு நகர்ப்புற நக்சல்தான்
அருந்ததிராய்!............ 8

கலைஞர் எனும் கொள்கைத் தீபத்தை கையில் ஏந்தி நடக்கும் இலட்சிய தலைவர் மு.க. ஸ்டாலின்
எம்.எல்.ஏ., கருணாஸ் வாழ்த்து............ 12

உண்டியல் குலுக்கினபோது............ 13

இந்தியத்தேசியத்திற்குள் தமிழ்த்தேசியம் இருக்கிறதா? அர்ஜுன் சம்பத் கட்டுரைக்கு மறுமொழி
- பெ.மணியரசன்............ 15

விசு கக்கும் விசம்
சுப உதயகுமாரன் ............ 17

மனித நேயம் போற்றிய தமிழக மீனவர்கள் ............ 20

ஏமாற்றினாரா பாலசுப்பிரமணியன் ஆதித்தன்............ 22

ஆசிரியப்பணி இறைப்பணி
- சி. நீனு ............ 23

படைப்பாளர் ஒரு பார்வை
- உமாமகேஸ்வரி ............ 24

மாவீரன் இராஜேந்திரசோழன் ............ 28

40 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள
மதுரை எக்ஸ்பிரஸ் ............ 31

மாட்டிறைச்சி சாப்பிடும் மக்களுக்கு
இந்துக்கள் உதவ வேண்டாம் ............ 33

பாவேந்தர் ஓர் பல்கலைக்கழகம்
- பீம பெருமாள்............ 34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.






# பலம் வாய்ந்தவர்?

தமிழக அரசியல் களத்தில் பலம் வாய்ந்த தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது பார்க்கப்படுகிறார். கலைஞர் அவர்களின் தன் முடிவுப்படியோ அல்லது குடும்பத்தினர் தூண்டுதலினாலோ, ஸ்டாலினின் விருப்பத்தினாலோ அழகிரி அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். கலைஞர் மறைவுக்குப்பின் திமுக என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும், என்னை கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். என் தம்பிதான் எனக்கும் தலைவர் என்றெல்லாம் பேசுகிற அளவிற்கு அழகிரி வந்தும்கூட, கட்சியில் சேர்க்கப்படவில்லை இதுவரை.


கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நாட்களிலேயே உறுதியான ஒரு முடிவை அழகிரி எடுத்திருந்தால் அவர் ஸ்டாலினுக்கு முதல் அச்சுறுத்தலாக இருந்தி ருப்பார். ஆனால், அவர் அப்படி ஏதும் செய்யாமல் இருந்தது ஸ்டாலினுக்கு பலத்தை சேர்த்தது என்றே கட்சியினர் கூறுகின்றனர். ஸ்டாலின்மேல் அதிருப்தி கொண்டிருந்த பலர், அழகிரியை நம்பி பயனில்லை, இனி ஸ்டாலினிடம்தான் கட்சி போகும் என்று உணர்ந்து மனதுக்குள் வேண்டாம் என்று நினைத் தாலும் ஸ்டாலினோடு பயணிக்க முடிவு செய்து செயல்படத் தொடங்கிவிட்டனர். முன்பிருந்த அளவிற்கு அழகிரியின் தனிப்பட்ட பலம் இருக்கிறதா என்றால் அதில் பலரும் ஐயப்படுகிறார்கள். கனிமொழி, அழகிரிக்கும் ஸ்டாலினக்கும் சமமான அளவில் மரியாதை கொடுத்திருந்தாலும் தற்போது ஸ்டாலின் தான் கட்சி, அவர்தான் இனி என் தலைவர் என்ற அளவிற்கு வந்துவிட்டார். ஆக, தற்போது ஆளுங்கட்சி யினரைவிட, தேசியக்கட்சியின் தமிழகத் தலைவர் களைவிட, ஸ்டாலின் தமிழகத்தின் பலம் வாய்ந்த தலைவராக வலம் வருகிறார் என்பதுதான் உண்மை.



அடுத்ததாக டி.டி.வி.தினகரன் அவர்கள் தமிழகத் தின் முக்கியத் தலைவராக கருதப்படுகிற அளவிற்கு வளர்ந்து வருகிறார். எதையும் சீர்தூக்கிப்பார்த்து அதைக் கையாளும் தன்மை. பொதுமக்களையும் செய்தி ஊடகங்களையும் சந்திக்கிற பாங்கு, இவரை ஒரு தலைவராக பொதுமக்களுக்கு அடையாளம் காட்டத் தொடங்கியிருக்கிறது. அதிமுக ஆட்சி முடிந்தால் அடுத்து தினகரன்தான் அதிமுக, என்ற பேச்சு பொதுமக்களிடையே நிலவுகிறது. வருகின்ற தேர்தல் களில் தமிழக அரசியல் எப்படி தோற்ற மளிக்கப் போகிறது என்பது ஓரளவிற்கு மக்களின் பேச்சுகளி லிருந்து அறிய முடிகிறது.

அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை இவிஎம் என்று சொல்லப்படுகிற எலக்ட்ரானிக் ஓட்டிங் மெசின் வேண்டாம், பலநாடுகளில் ஓட்டுச்சீட்டு முறையே நடைமுறையில் உள்ளது, அதுவே நம்பத் தகுந்தது, இந்தியாவில் பழைய முறையிலான வாக்களிப்பையே கொண்டு வரலாம் என்று கூறியும் தேர்தல் ஆணையம் அதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிய வில்லை.

தமிழகத்தில் யார் பல மாக இருந்தாலும் பலவீனமாக இருந்தா லும் அதிகாரத் தில் உள்ளவர்களுக்கு வாக்கு இயந்திரம் பலமாக மாறி விடுமோ என்ற அச்சம் பொது மக்களிடமும் நடுநிலையா ளர்களிடமும் உள்ளதை யா ராலும் மறுத்திட இயலாது.




# ஒப்பந்தத்தை மேதகு பிரபாகரன் ஏற்கவில்லை! மோகன்தாஸ் சொன்னதை வழிமொழியும் ஃபெரோஸ் அஹமத்

அந்த ஒப்பந்தத்தை மேதகு பிரபாகரன் ஏற்கவில்லை! மோகன்தாஸ் சொன்னதை வழிமொழியும் ஃபெரோஸ் அஹமத்.

ராஜீவ் காந்தி படுகொலை ஒரு உள்வேலையா? என்ற தலைப்பில் டெல்லி பத்திரிகையாளர் ஃபெரோஸ் அஹமத் எழுதியுள்ள புத்தகம் பல்வேறு தரப்பில் பலத்த சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. இந்த புத்தகத்தை எழுதியுள்ள டெல்லி பத்திரிகையாளர் ஃபெரோஸ் அஹமதுவின் பேட்டி வெளியாகி உள்ளன. அதன் இறுதிப்பகுதி இது.

“இப்படி ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்று என்னைத் தூண்டியது தமிழகத்தின் டி.ஜி.பியாக இருந்த மோகன்தாஸ். அவர் ஒரு நாவல் எழுதியிருக் கிறார் என்பதே பலருக்கும் தெரியாது. உண்மையில் அது நிஜக்கதை, ராஜீவ் கொலைக்கான பின்னணி, காரணகர்த்தாக்கள் எல்லாம் இந்த நாவலுக்குள் வருகிறார்கள்.

இந்த நாவலின் பெயர் The Assassination. 1993ஆம் ஆண்டு இந்த நாவல் வெளியானது. நாவலில் உள்ள தகவல்களை இந்திய ரா உளவுத்துறை அதிகாரிகள் அவருக்கு கொடுத்திருக்கலாம் என்று நினைக் கிறேன். இதை வெளியிட்டது ரா சம்பந்தப்பட்ட பப்ளிகேஷன் [launchers].

இந்தப் புத்தகம் மக்களிடம் சென்று சேராமல் தடுத்து விட்டனர். அப்போது நரசிம்மராவ் இந்தியாவின் பிரதமராக இருக்கிறார். எனக்குக்கூட இந்தப் புத்தகம் பற்றிய தகவல், சுப்பிரமணியன் சுவாமியின் புத்தகத்தின் மூலம்தான் கிடைத்தது. இந்தப் புத்தகத்தை தேடினேன். எங்கேயும் கிடைக்க வில்லை. இறுதியில் புலனாய்வுத் துறை நண்பர் ஒருவர் கொடுத்த தகவலின்படி அந்தப் புத்தகத்தை வாங்கப் போனேன். அங்கே அந்தப் புத்தகத்தின் ஜெராக்ஸ்தான் எனக்கு கிடைத்தது.

இந்தப் புத்தகம் அப்படியே ராஜீவ் கொலைச் சதியை திட்டமிட்டவர்களை, பலனடைந்தவர்களை கதாபாத்திரங்களாக எடுத்து வைக்கிறது. வில்லன் கேரக்டராக இருப்பவர் பாதர் மூன்சைன். இவர்தான் சந்திரா சாமி. ராஜீவ் காந்தியாக ஜார்வின் என்கிற கேரக்டர் வருகிறது. சுந்தன் என்கிற கேரக்டர் பிரபாகரனை வெளிப்படுத்து கிறது. ஐரோப்பிய மொழி ஒன்றில் ஒற்றை கண்ணுக்கு சைக்லேப்ஸ் என்று சொல்லப்பட அந்தப் பெயர் சிவராசனுக்கு இவர் Delta Force II என்கிற சினிமா படத்தைப் பார்த்து மனித வெடி குண்டு தணுவை உருவாக்கும் கதை இந்த நாவலில் வருகிறது.

ராஜீவ் கொலையை நேரடியாக எழுதினால் அது அப்போதைய ஆளுங்கட்சியை எதிர்நோக்க வேண்டி யது இருக்கும் என்பதை எதிர்பார்த்து ஒரு

நாவலாகக் கொடுத்துள்ளார். அவருடைய பதவிக் காலத்தின் இறுதியில் எல்.டி.டி.ஈக்கும் மோகன் தாஸுக்கு விரோதம் உண்டு. ஆனாலும், அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல் உண்மையை சொல்லி யுள்ளார். இது கான்ட்ராக்ட் கில்லிங் என்கிறார்.

இந்த நாவலின் படி பாதர் மூன்சைன்னுக்கு (சந்திராசாமி) ஜார்வின் (ராஜீவ்காந்தி) மீது போபர்ஸ் ராணுவ பீரங்கி பேரத்திலிருந்து விரோதம் தொடங்கு கிறது. பாதர் மூன்சைன் சுந்தனை தொடர்பு கொண்டு ஒப்பந்தம் பேசுகிறார். ஜார்வினை தீர்த்துக்கட்டும் ஒப்பந்தம். சுந்தன் இந்த ஒப்பந்தத்துக்கு முன்வர வில்லை. நான் இது போன்ற வேலையெல்லாம் செய்வது இல்லை என்கிறார் சுந்தன். இதற்கு சில காரணங்களையும் சுந்தன் சொல்கிறார் அரசியல் ரீதியாக ஜார்வின் ஒழிந்து போய்விட்டார். அவர் அதிகாரத்துக்கு திரும்ப வரப்போவதில்லை. அதிலும் எங்கள் இயக்கம் இதுபோன்ற கான்ட்ராக்டை யெல்லாம் எடுத்துச் செயல்படாது. எங்கள் இயக்கத் துக்கு தேவைப்பட்டால் செய்வோம். அவருடைய ராணுவம் எங்களைக் கொல்ல திரும்ப வரப்போவ தில்லை. இப்படிப்பட்டவரைக் கொல்ல எங்கள் ஆட்களை வீணாக்க நான் விரும்பவில்லை.

ஆனால், பணத்துக்காக இப்படிப்பட்ட காரியங் களைச் செய்பவர்கள் இருக்கிறார். அவர்களைப் பாருங்கள் என்று கூறியது நாவலில் வருகிறது. ஆனால், சுந்தன் தலையிடவில்லை என்று நாவல் சொல்கிறது.

எல்.டி.டி.ஈக்கு இதில் சம்பந்தம் இல்லை என்பதை ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட நாள் முதல் ரா உளவு அமைப்பு சொல்லி வருகிறது. 1991 மே 21ஆம் தேதி இரவு ராஜிவ் காந்தி கொல்லப்படுகிறார். 22ஆம் தேதி மத்திய அமைச்சரவை கூடுகிறது. அதில் ஐ.பி.இயக்கு னர், ரா அமைப்பின் தலைவர் எல்லாம் இருக்கின்றனர்.

ஆனால் கூட்டத்தின் முடிவில் சுப்பிரமணியன் சுவாமி, கொலைக்கான காரணம் எல்.டி.டி.ஈ என்று அறிவிக்கிறார். ரா தலைவர், இதில் எல்.டி.டி.ஈ இல்லை என்கிறார். அதன் பிறகு தமிழக அரசியல்வாதிகள் இதனைக் கையில் எடுத்து எல்.டி.டி.ஈ.தான் காரணம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

எல்.டி.டி.ஈயின் முக்கிய புள்ளிகளிடம் விசாரிக்க வில்லை. அந்த இயக்கத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு தமிழகத்தில் திரிந்த கீழ்மட்டதைச் சேர்ந்த சிலரைப் பிடித்து வாக்குமூலத்தையும் சில கடிதங் களையும் ஆதாரமாக வைத்து எல்.டி.டி.ஈ.யை சி.பி.ஐ. குற்றவாளியாக ஆக்குகிறது.

தணுவும் சாந்தனும் பிரபாகரனுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதங்களை இரும்பொறை என்பவரிட மிருந்து கைப்பற்றியதாகக் கூறியது சி.பி.ஐ. இறந்து போனவர்களின் கடிதங்கள் இவை. கையெழுத்து

**ஜெயின் கமிஷனில் பதிவு செய்யப்பட்ட பின்னரும் இந்த வெளிநாட்டுத் தொடர்பு தகவலை சி.பி.ஐ.யும் சிறப்புப் புலனாய்வும் ஏன் கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த கோணத்தில் விசாரிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.**

உண்மையா என்பது இதுவரை தெரியாது. ஆனால், சி.பி.ஐ. சில சாட்சியங்களை அவர்களே உருவாக்கி எல்.டி.டி.ஈ.யைச் சம்பந்தப்படுத்தினர்.

ஒரு புலனாய்வுப் பத்திரிகையாளர் என்கிற அனுபவத்தில் நான் சொல்லுவது, இதில் பல சாட்சி யங்கள் உருவாக்கப்பட்டவை. இது ஒரு ஒப்பந்தக் கொலை, பணத்துக்காக நடந்தவை. சிவராசன் ஒரு இரட்டை ஏஜெண்ட். இந்திய புள்ளிகள்தான் இந்த ஒப்பந்தக் கொலைக்கு ஏற்பாடுகளை செய்துள்ளனர். ஜெயின் கமிஷன் ரிப்போர்ட்படி பிரபல சவூதி அரேபிய ஆயுத வியாபாரியான அட்னான், அர்னி மில்லர், சந்திராசாமி போன்றவர்களுக்கிடையே ஏராளமான மில்லியன் டாலர் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது.

ஜெயின் கமிஷனில் பதிவு செய்யப்பட்ட பின்னரும் இந்த வெளிநாட்டுத் தொடர்பு தகவலை சி.பி.ஐ.யும் சிறப்புப் புலனாய்வும் ஏன் கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த கோணத்தில் விசாரிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

சிவராசன் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு 1991 மார்ச் மாதம் சிங்கப்பூர், சவூதி அரேபியா, துபாய் போன்ற நாடுகளுக்கு சென்று வந்துள்ளார். இது விசாரணையின் ஒரு பகுதி. ஆனால், இவற்றை ஏன் மூடி மறைத்தனர்? இப்படி ஏராளமான கேள்விகள் உள்ளன.

கணவரைக் கொல்லக் காரணமானவர்களை சோனியா ஏன் கண்டுபிடித்துச் சொல்லவில்லை? என்று நீங்கள் கேட்கலாம். அப்படி அவர் அதை செய்திருந்தால் அவரது காங்கிரஸ் கட்சியையே குழி தோண்டிப் புதைத்திருப்பார்கள். இப்படியொரு சூழ்நிலை உருவாவதைத் தடுக்கத்தான் சோனியா மௌனமானார்'' என்று முடித்தார் ஃபெரோஸ் அஹமத்.

உண்மைக் குற்றவாளிகள் என்றுதான் தண்டனை அடைவார்கள்? அப்பாவிகள் எப்போதுதான் விடுவிக் கப்படுவார்கள்? ●




# இதுதான் கதி!

உலக வரலாற்றை ஊன்றிப்படிப்பவர்களுக்கு கடந்த காலப் பதிவுகள் தெள்ளத் தெளிவாகத் தெரியவரும். இது உண்மை.

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அடுத்தவரைக் காட்டிக் கொடுப்பதும் அள்ளி அள்ளிக் கொடுத்திருந் தாலும் தனக்கு ஆபத்து என்றால் போட்டுத் தள்ளுவதும் உள்ளூர் அரசியலில் மட்டுமல்ல, உலக அரசியல் வரை சகஜமான விசயம்.

லிபியாவின் அதிபராக, அசைக்க முடியாத தலைவராக இருந்த கடாபி, பாதாளச் சாக்கடையில் பதுங்கியிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுத்தள்ள உத்தரவிட்டது பிரான்ஸ் அதிபர் என்பதும் அவரைக் காட்டிக் கொடுத்தது சிரியா அதிபர் என்பதும் தெரிய வந்தது.

உலகம் முழுவதும் இருக்கும் சர்வாதிகாரிகள், ரகசியமாக பல நாட்டுத் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருப்பார்கள். தேர்தல் நேரத்தில் கோடிக் கணக்கில் டாலர்களைக் கொட்டுவார்கள். கோடிகள் கொட்டும் பிசினஸ் டீலிங்கை செய்து கொடுப்பார்கள். இதெல்லாமே ஆபத்து வரும்போது ஆதரவுக் குரல் கொடுக்கவும் தேவைப்படும்போது அடைக்கலம் கொடுப்பதற்கும்தான். அப்படித்தான் லிபியா அதிபர் கடாபி பல நாட்டுத் தலைவர்களுக்கும் பணஉதவி செய்திருக்கிறார். 2007ஆம் ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தலில் சர்கோசி பிரச்சாரத்திற்காக பல கோடி டாலர்களை கடாபி வழங்கினார். இவருக்கு மட்டுமல்ல, இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேருக்கும் பலகோடி டாலர்கள் கிடைக்கும்படி வர்த்தகத் தொடர்புகளை உருவாக்கிக் கொடுத்திருக் கிறார்.

எதுவெல்லாம் ஆபத்துக்காலத்தில் தனக்கு உதவியாக இருக்கும் என்று கடாபி நினைத்தாரோ அவை எல்லாம் அவருக்கு எமனாகிவிட்டன. நேட்டோ படைகள் கடாபியை வேட்டையாடியபோது பிரான்சும் களம் இறங்கியது. கடுப்பாகிப்போன கடாபி தேர்தலுக்கு சர்கோசிக்கு தான் கொடுத்த டாலர்களை நினைவூட்டி எச்சரித்தார். அப்போதே கடாபி உயிரோடு பிடிபட்டால் தனக்கு ஆபத்து என்பதை உணர்ந்த சர்கோசி கடாபிக்கு எதிரான கிளர்ச்சியாளர் கூட்டத்தில் பிரான்ஸ் உளவாளியைச் சேர்த்தார். கடாபியின் இருப்பிடத்தை அறிந்து கொள்ள சிரியா நாட்டுச் சர்வாதிகாரியான ஆசாத் உதவி செய்தார்.

கடாபியின் சேடிலைட் போன் நம்பரைக் கொடுத் தார். அதன்மூலம் கடாபியின் இருப்பிடம் தெரிந்தது, நேட்டோ விமானங்கள் தாக்குதல் நடத்தின. அதிலிருந்து தப்பித்து பாதாளச் சாக்கடையில் பதுங்கி யிருந்த கடாபியை பிரான்ஸ் உளவாளி கொன்றிருக் கிறார்.

சர்வாதிகாரிகள் கடைசியில் இப்படித்தான் சாகிறார்கள் என்று வரலாறு கூறுகிறது.

மக்களை வஞ்சித்து ஏமாற்றும் அவர்களும் வஞ்சிக்கப்பட்டே சாகடிக்கப்படுகிறார்கள்.

தொகுத்தவர் : **பீமபெருமாள்,**
அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம்

எதிர்ப்புகள் நாலாபுறத்திலிருந்தும் கிளம்பி வரும் என அறிந்திருந்தும் ஐந்து பேரை மோடி அரசு கைது செய்திருப்பதன் பின்னணி என்ன? விளக்குகிறார் அருந்ததிராய்

இன்றைய செய்தித்தாள்கள் (ஆகஸ்டு 30, 2018) தாங்கி வந்துள்ள செய்திகள் குறித்து நாம் சில காலமாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்தியன் எக்ஸ்பிரஸின் முதல் பக்க செய்தியின் தலைப்பு. நீதிமன்றத்தில் போலீசு, அரசாங்கத்தை தூக்கியெறிவதற்கான பாசிச எதிர்ப்புத் திட்டத்தின் பகுதியாக இருந்தவர்கள்.

சொந்த போலீசாலேயே பாசிசவாதி என அழைக் கப்படும் அரசாங்கத்துக்கு எதிராக நாம் இருக்கிறோம் என்பதை இப்போது அறிந்து கொள்ள வேண்டும். தற்போதைய இந்தியாவில், ஒருவர் சிறுபான்மையி னராக இருப்பது ஒரு குற்றம், கொலை செய்யப்படுவது ஒரு குற்றம், அடித்து கொல்லப்படுவது ஒரு குற்றம், ஏழையாக இருப்பது ஒரு குற்றம், வறியவர்களை ஆதரிப்பது அரசாங்கத்தை தூக்கியெறிவதற்கான திட்டமிடல்.

அறியப்பட்ட செயல் பாட்டாளர்கள், கவிஞர்கள், வழக்கறிஞர்கள், மத போதகர் களின் வீடுகளை புனே போலீசு நாடு முழுவதும் ஒரே நேரத்தில் சோதனை இட்டது, ஐவரை கைது செய்தது, முக்கியமான சிவில் உரிமைப் பாதுகாவலர்கள், இரண்டு வழக்கறிஞர்கள் நகைப்புக் குரிய குற்றச் சாட்டுகளில், சிறு அல்லது ஒன்றுமேயில் லாத ஆதாரங்களின் அடிப்படையில் கைதாகியிருக்கிறார்கள். அரசு, இது கடுமையான எதிர்வினைகளைக் கிளறி விடும் என அறிந்திருந்தும் செய்தது. இந்த பத்திரிகையாளர் சந்திப்பு, கைதுக்கு எதிராக நாடு முழுவதும் நடத்தப்படும் போராட்டங்கள் உள் ளிட்ட நம்முடைய எதிர்வினைகளை யெல்லாம் அரசு இந்த நடவடிக்கையை எடுக்கும்முன் கணக்கில் கொண்டிருக்கும். எனவே, ஏன் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?



# நானும் ஒரு நகர்ப்புற நச்சல்தான்

# அருந்ததி ராய்!

வாக்காளர்களின் தகவல்களை வைத்து லோக்நீதி செய்த சமீபத்திய கருத்துக் கணக்கில் பா.ஜ.க.வும் பிரதமர் நரேந்திர மோடியும் தங்களுடைய செல்வாக்கை கணிசமான அளவில் இழந்திருக் கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், நாம் ஆபத்தான காலத்துக்குச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதே. இந்தச் செல்வாக்கு குறைவு மற்றும் எதிர்க்கட்சிகளுக்கான ஆதரவு பெருகுவதை மறைக்க இனி தொடர்ச்சியான கருணையற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

கைதுகள், படுகொலைகள், அடித்துக்கொல்லுதல், வெடிகுண்டு தாக்குதல், கொடியை முன்வைத்து கொலை, கலவரங்கள், இனப்படுகொலைகள் என தேர்தல் முடியும்வரை இந்த சர்க்கஸ் தொடரும். அதுதான் பிரித்தாள்வது. இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள், திசைதிருப்பி ஆள்வது. இப்போதிலிருந்து தேர்தல் வரை, எப்போது, எங்கிருந்து நெருப்பு பந்து நம்மேல் விழும் என நம்மால் கணிக்க முடியாது. அந்த நெருப்புப் பந்து எப்படிப்பட்டது என்பதும் தெரியாது. வழக்கறிஞர்கள், செயல்பாட்டாளர்கள் கைது குறித்து பேசும் முன்னர், நெருப்பு மழையும், வினோதமான சம்பவங்களும் நம்மீது விழும் முன், நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நவம்பர் 8, 2016 அன்று டிவியில் தோன்றி மோடி அறிவித்த பண மதிப்பு நீக்க அறிவிப்பு முடிந்து ஒரு ஆண்டு, ஒன்பது மாதங்களாகிறது. இந்த அறிவிப்பால் அவருடைய அமைச்சரவையே வியப்படைந்தது. 99% சதவீத பணம் வங்கிக்குத் திரும்பிவிட்டதாக இப்போது ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது. இங்கிலாந்தின் கார்டியன் பத்திரிகை, இந்த பண மதிப்பிழப்பு நடவடிக்கை நாட்டின் 1%பொருளாதார வளர்ச்சியை குறைத்ததோடு, 1.5 மில்லியன் வேலையிழப்புகளை ஏற்படுத்தியதாக தெரிவிக்கிறது. அதே நேரத்தில், புதிய பணத்தை அச்சடிக்க பல ஆயிரம் கோடிகள் செலவழிக்கப்பட்டுள்ளது. பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பின் ஜி.எஸ்.டி. அமலாக்கப்பட்டது. பண மதிப்பிழப்பால் அல்லாடிக்கொண்டிருந்த சிறு மற்றும் குறுந்தொழில்களை அது முற்றிலுமாக அழித்துவிட்டது.

சிறு தொழில்கள், வர்த்தகர்கள் குறிப்பாக ஏழைகள், அதிக அளவில் இதனால் பாதிக்கப்பட்டனர். அதே சமயம், பா.ஜ.க. வுக்கு நெருக்கமான நிறுவனங்கள் தங்களுடைய சொத்து மதிப்பை பன்மடங்காக உயர்த்திக்கொண்டன. அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்க விஜய் மல்லையா, நீரவ் மோடி போன்றோர் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிலான மக்களின் பணத்தை எடுத்துக்கொண்டு ஓட அனுமதிக்கப்பட்டார்கள்.

எத்தகைய பொறுப்புத்தன்மையை இவர்களிடம் நாம் எதிர்பார்க்க முடியும்? ஒன்றுமில்லை? சுழியம்?

இவற்றின் ஊடாக, 2019ஆம் ஆண்டு தேர்தலுக்கு தயாராகும் வகையில் பாஜக நாட்டிலேயே பணபலம் மிக்க கட்சியாக உருவெடுத்துவிட்டது. அதிர்ச்சியூட்டும் விதமாக, சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நன்கொடைகளை பத்திரங்களாக வாங்கும் முறையிலும் அரசியல் கட்சிகளின் நன்கொடையாளர்கள் குறித்த விவரங்கள் மூடியே பாதுகாக்கப்படுகின்றன.

2016ஆம் ஆண்டு மும்பையில் மேக் இன் இந்தியா நிகழ்ச்சி மோடியால் தொடங்கி வைக்கப்பட்டபோது நடந்த கேலிக்கூத்து நினைவிருக்கலாம். முக்கிய அரங்கின் கலாச்சார நிகழ்வு நடந்த இடத்தில் மிகப்பெரும் தீ விபத்து ஏற்பட்டது. ஆனால், நிஜமான தீப்பிழம்பு, மேக் இன் இந்தியாவின் நோக்கமான ரஃபேல் விமான ஒப்பந்தத்திலிருந்து வெளிப்பட்டது. தன் சொந்த பாதுகாப்புத் துறை அமைச்சருக்குத் தெரியாமலேயே, தன்னிச்சையாக முடிவெடுக்கப்பட்டு பிரதமரால் பாரிசில் ரஃபேல் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. இது அனைத்து பாதுகாப்பு விதிமுறைகளையும் மீறிய செயல்பாடாகும்.

இந்த ஒப்பந்தம் காங்கிரஸ் கூட்டணி அரசில் 2012ஆம் ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டு, இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் லிமிடெட் என்ற இந்திய அரசு நிறுவனம் விமானங்களின் பாகங்களை ஒன்றிணைக்கும் பணியை செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இது குப்பையில் கிடத்தப்பட்டது. இந்துஸ்தான் ஏரேநாடிக்ஸ் நிறுவனம் குறிவைத்து தாக்கப்பட்டது. காங்கிரஸ் உள்ளிட்ட பலர் மோடியின் ஒப்பந்தத்தில் கற்பனைக்கெட்டாக ஊழல் நடந்திருப்பதையும் ஒரு விமானத்தைக் கூட இதுநாள் வரை உருவாக்கியிராத ரிலையன்ஸ் டிபென்ஸ் நிறுவனத்தின் தலையீடு மற்றும் திரைமறைவில் நடந்த பேரங்கள் பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

எதிர்க்கட்சிகள், நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணையைக் கோரின. நாம் ஏதாவது ஒன்றை எதிர்பார்க்க முடியுமா? அல்லது அவை அனைத்தையும் ஒரு மடக்கில் விழுங்கிவிட வேண்டுமா?

கர்நாடகா போலீசார் பத்திரிகையாளர் மற்றும் செயல்பாட்டாளர் கவுரி லங்கேஷ் படுகொலை குறித்து விசாரித்து வருகிறார்கள். அந்த விசாரணையில் பலர் கைது செய்யப்பட்டு சனாதன் சன்ஸ்தா போன்ற வலதுசாரி இந்துத்துவ அமைப்புகளின் நடவடிக்கைகள் வெளிச்சத்துக்கு வந்தன.

நிழல் உலகில் இயங்கும், தீவிரவாத வலைப் பின்னலும் யாரை கொலை செய்யப்போகிறார்கள் என்ற அவர்களுடைய ஹிட் லிஸ்டும் அவர்களுடைய மறைவிடங்கள், மக்களைக் கொல்லும் ஆயுதங்களும்

வெடிகுண்டுகளும் விசாரணையில் வெளிவந்தன. இந்தக் குழுக்களைப் பற்றி நம்மில் எத்தனை பேர் அறிவோம்? எத்தனை பேர் இன்னும் ரகசியமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்? அதிகாரத்தின் ஆசியுடன், காவல்துறையின் ஒத்துழைப்புடன் அவர்கள் என்ன திட்டங்களை நமக்காக வைத்திருக் கிறார்கள்? தாக்குதல் நடத்தப்படுவது என்பது என்ன? அப்படியெனில் எது உண்மையானது? இது எங்கே நடக்கும்? காஷ்மீரிலா? அயோத்தியிலா? கும்பமேளா விலா? எப்படி எளிதாக அனைத்து தாக்குதல்களும் குழையும். ஊடகங்களால் மடைமாற்றம் செய்யப்படு கின்றன? இந்த உண்மையான அச்சுறுத்தல்களிலிருந்து திசை திருப்பத்தான், சமீபத்திய கைதுகளுக்காக நம்மை கண்ணீர் சிந்த வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வி நிறுவனங்கள் அழிக்கப்படும் வேகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய தடம் பதித்த பல்கலைக்கழகங்களுக்கான அழிவையும் பேப்பரில் மட்டுமே உள்ள போலி பல்கலைக் கழகங் களுக்கான உயர்வையும் பார்த்துக்கொண்டிருக் கிறோம். சொல்லப்போனால் இதுதான் மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம். இது பல வழிகளில் நிகழ்ந்து வருகிறது. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் நம் கண்முன்னே சீரழிக்கப்படுவதைப் பார்க்கிறோம். மாணவர்களும் ஆசிரியர்களும் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். பல தொலைக்காட்சி சேனல்கள் பொய்களை, ஜோடிக்கப்பட்ட, வீடியோக் களை பரப்பி மாணவர்களின் வாழ்க்கையை கேள்விக் குள்ளாக்கியிருக்கின்றன. பொய்களால் இரக்கமற்று துரத்தப்பட்ட இளம் ஆய்வாளரான உமர் காலித் மீது படுகொலை முயற்சி நடக்கிறது. இந்து மதவெறியர் களால் தபோல்கர், பன்சாரே, கவுரிலங்கேஷ், கல்புர்கி கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பிறகு அவர்கள் வரலாற்றை திரிக்கும் வேலை களையும் பாடத்திட்டங்களை கேலிக்குள்ளாக்கும் வகையில் செயல்படுகிறார்கள். சமீப சில ஆண்டுகளில் ஒருவகையான குணப்படுத்த முடியாத முடத் தன்மையை கல்வி புலத்தில் உண்டாக்கியிருக்கிறார்கள். இறுதியாக, தனியார்மயமாக்கப்பட்ட கல்வி, இட ஒதுக்கீடு செய்த சிறு நன்மையைக் கூட செய்யவில்லை. பெருநிறுவனங்களின் முகமூடியோடு கல்வி பார்ப்பன மயமாக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தலித், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்கள் கட்ட ணங்களை கட்டத்திணறி கல்வி நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படுவதைப் பார்க்கிறோம். இது நிகழத் தொடங்கிவிட்டது. இது முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ள முடியாதது.

5.மிகப்பெரும் துயரத்தில் இருக்கிறது வேளாண் துறை, விவசாயிகளின் தற்கொலைகள் அதிகரித்த படியே உள்ளன. முசுலீம்கள், அடித்துக்கொல்லப் படுகிறார்கள், தலித்துகள் இரக்கமற்று தாக்கப்படு கிறார்கள். பொதுவெளியில் ஏவப்படும் கும்பல் வன்முறை, உயர்சாதிகளின் தாக்குதலுக்கு எதிராக எழுந்து நின்ற பீம் ஆர்மியின் தலைவரான சந்திர சேகர் ஆசாத் கைது செய்யப்படுகிறார். பட்டியல் இன மற்றும் பழங்குடிகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப்போக வைக்கச் செய்யப் பட்ட முயற்சி என சொல்லிக்கொண்டே போகலாம்.

சொல்ல இத்தனை இருக்கின்றன. சமீபத்தில் நடந்த கைது நடவடிக்கைகளுக்கு வருகிறேன்.

கைது செய்யப்பட்ட வெர்னான் கோன்சால்ஸ், அருண் ஃபெரைரா, சுதா பரத்வாத், வரவர ராவ், கௌதம் நவ்லாகா ஆகிய ஐவரில் ஒருவர் கூட டிசம்பர் 31ஆம் தேதி நடந்த எல்கர் பரிஷத் பேரணியில் கலந்துகொள்ளவில்லை. இந்தப் பேரணியின் முடிவில் கிட்டத்தட்ட 3லட்சம் மக்கள், பெரும்பான்மையினர் தலித்துகள், ஆண்டின் பீமா கொரேகான் வெற்றியைக் கொண்டாடுவதற்காக குழுமினர்கள். (தங்களை சுரண்டிக்கொண்டிருந்த பேஷ்வாக்களுக்கு எதிராக பிரிட்டிஷாருடன் இணைந்து தலித் மக்கள் போராடி வெற்றி கண்டனர். தலித்துகள் பெருமையுடன் கொண்டாடக்கூடிய சில வெற்றிகளில் இதுவும் ஒன்று)

ஓய்வுபெற்ற நீதிபகளான சாவந்த் மற்றும் கோல்சே பட்டீல் ஆகியோரின் தலைமையில் எல்கர் பரிசத் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. பேரணியில் பங்கெடுத்தவர்கள் மீது இந்துத்துவ வெறியர்கள் தாக்குதல் நடத்தினர். அதனால் சில நாட்கள் பதற்றம் உண்டானது. மிலிந்த் எக்போடே மற்றும் சம்பாஜி பிடே ஆகியோர் இதில் முதன்மை குற்றவாளிகள். இன்னும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. அவர்களுடைய ஆதரவாளர் ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு, செயல்பாட்டாளர்கள் ரோமா வில்சன், சுதிர் தாவ்லே, ஷோமா சென், மிஹிர்ராட், அவர்களுடைய வழக்கறிஞர் சுரேந்திர கட்லிங் ஆகியோர் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் மீது பேரணியில் வன்முறையை தூண்டிவிட்டது என்கிற குற்றச்சாட்டும் வைக்கப்படுகிறது. அவர்கள் உஃபா சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு இப்போதும் காவலில்தான் உள்ளார்கள். நல்லவேளையாக, இஷ்ரத் ஜஹான், சொராபுதீன், கவுசர் பீ போன்றோரைப் போல் அல்லாது அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் இதே காரணங்களுக்காக குற்றம் சாட்டப்பட்ட அவர்கள், வழக்கு விசாரணையை எதிர்கொள்வதற்குக்கூட உயிருடன் இல்லை.

காங்கிரஸ் அரசாங்கமானாலும் பா.ஜ.க. அரசா னாலும் தங்கள் அரசின் பழங்குடியினர்களுக்கு

எதிரான தாக்குதலை மறைக்க, இப்போதைய அரசு தலித்துகள் மீதும் தாக்குதல் நடத்துகிறது அவற்றை நக்சல்கள் அல்லது மாவோயிஸ்டுகள் மீதான தாக்கு தலாகக் கூறின. முசுலீம்கள் ஏறக்குறைய வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் அனைத்து கட்சிகளும் பழங்குடிகள் மற்றும் தலித் மக்கள் வாழும் தொகுதிகளை முக்கியமான வாக்கு வங்கியாக பார்ப்பதன் விளைவு இது. செயல்பாட்டாளர்களை கைது செய்து மாவோயிஸ்டுகள் என அழைப்பதன் மூலம் அரசு, தலித் எழுச்சியை கொச்சைப்படுத்துகிறது, குறைத்து மதிப்பிடுகிறது, அதே சமயம் தலித் தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவ தாகவும் தோற்றத்தை உருவாக்குகிறது. இன்று ஆயிரக் கணக்கான வறிய, பின்தங்கிய மக்கள் தங்களுடைய உறைவிடத்துக்காகவும் நிலத்துக்காகவும் மரியாதைக் காகவும் போராடி சிறையில் இருக்கிறார்கள். தேச விரோத சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டு, வழக்கு விசாரணைக்குக் கூட ஆட்படுத்தப்படாமல் சிறையில் கும்பலாக அடைக்கப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட மூன்று வழக்கறிஞர்களும், நன்றாக அறியப்பட்ட ஏழு செயல்பாட்டாளர்களும் நீதி மறுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பாக, சல்வாஜுடும் என்ற கூலிப்படை, சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தாரில் உருவாக் கப்பட்டது. மக்களை கொல்வது, ஒரு கிராமத்தையே எரிப்பது என வன்முறைகளில் ஈடுபட்டது. பியூசிஎல் அமைப்பின் அப்போதைய பொதுச் செயலாளரான டாக்டர் பினாயக் சென் பாதிக்கப்பட்டவர்களுக்காக பேசினார். பினாயக் சென் சிறையில் அடைக்கப் பட்டபோது, தொழிலாளர் சங்கத்தலைவராகவும், வழக்கறிஞராகவும் இருந்த சுதா பரத்வாஜ் அவருடைய பணிகளைச் செய்தார். பஸ்தாரில் துணை ராணுவப் படையின் தாக்குதல்களுக்கு எதிராக அயராது பிரச்சாரம் செய்தார். பேராசிரியர் சாய்பாபா, கைது செய்யப்பட்ட பினாயக் சென்னுக்கு ஆதரவாகவும் அவர் நின்றார். சாய்பாபா கைது செய்யப்பட்டபோது ரோனா வில்சன் வந்து நின்றார். சுரேந்திர கட்லிங் சாய்பாபாவின் வழக்கறிஞர். ரோனா வில்சன், சுரேந்திர கட்லிங், சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லாகா ஆகியோர் கைது செய்யப்பட்டபோது மற்றவர்கள் அவர்களுக்காக நின்றார்கள். இது இப்படியே போய்க்கொண்டிருக்கும்.

அவர்கள் தடுத்து நிறுத்தப்படுவதும் அமைதியாக் கப்படுவதும் கொடூரமானது. கடவுளே எங்கள் நாட்டை திரும்பப் பெற எங்களுக்கு உதவுங்கள்.

---

*எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதி த வயரில் வெளியான கட்டுரை தமிழாக்கம். நன்றி: வினவு.*

---

# பணம் பத்தும் செய்யும்

பணத்தைத் தேடியதால் மனதை இழந்தோம்
உண்ணாமலும் உறங்காமலும் உடலைப்
பொருட்படுத்தாமல் பொருள் சேர்த்தோம்
உடலும் இங்கு பழுதாச்சு
பொருளும் இப்போ கரைஞ்சு போச்சு
மருத்துவமனைக்கு நாளும் போகலாச்சு
உடலும் இப்போ தேறவில்லையப்பா
இதையெல்லாம் யாரிடம் சொல்வதப்பா

வாழ்க்கைக்கு தேவை பணம் தானப்பா
பணமே வாழ்க்கை இல்லையப்பா
சொத்துப் பத்து சேர்த்ததனால் சொந்தம்
அஞ்சி அருகில் வர மறுத்திடுச்சு
என்னை பணக்காரன் என்ற போர்வை
என்னை தள்ளிவைச்சு விளையாடிடுச்சு

இன்று சொத்துமில்லை பத்துமில்லை
சொந்தம் ஒன்றுகூட அருகில் இல்லை
பணத்தால் வந்த சோதனை
எந்த வகையில் தீரும் என் வேதனை

வாணியம்பாடி தியாகராஜன்.
9962082032

# அன்னையின் பதில்

ஒருவர் அன்னை தெரசாவிடம், "அம்மா! தீவிர நோய்வாய்ப்பட்டவர்கள் எப்படியும் இறக்கத்தான் போகிறார்கள்! அவர்களை தற்காலிகமாகப் பிழைக்க வைக்க முயற்சிகளை எடுத்து ஏன் சிரமப்படுகிறீர்கள்?" என்று ஒரு வினாவைத் தொடுத்தார்.

அதைக்கேட்ட தெரசா அம்மையார், "நீங்கள் சொல்வது சரிதான். எந்த ஒரு நோயாளியையும் என்னால் உயிர் பிழைக்க வைக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால், அதே நேரம், மரணமடையும் அந்தத் தருவாயில் உள்ள ஒரு ஜீவன், ஒரு நோயாளியான நம்மிடம் அன்பு செலுத்தவும் சிலர் இருக்கிறார்கள் என்கிற எண்ணத்தை, நம்பிக்கையைத் தரமுடியுமல்லவா? அவர்களை நிம்மதியாக இறுதிமூச்சை விடச் செய்யலாம் அல்லவா?" என்று கேட்டார். கேள்வி கேட்டவரால் பதில் சொல்ல முடியவில்லை.


---

**கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லை என்றால் கடமையைநிறைவேற்ற முடியாது!**

**– அறிஞர் அண்ணா**

# கலைஞர் எனும் கொள்கைத் தீபத்தை கையில் ஏந்தி நடக்கும் இலட்சியத் தலைவர் மு.க.ஸ்டாலின்

## தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மு.க.ஸ்டாலினுக்கு எம்.எல்.ஏ. கருணாஸ் வாழ்த்து



திராவிட முன்னேற்றக் கழகம் இன்று புதிதாய் பிறக்கிறது! பெரும் மதிப்பிற்குரிய அன்புச் சகோதரர் மு.க. ஸ்டாலின் அவர்களும் இன்று தலைவராய் பிறக்கிறார்“ஒரு நாயகன் உதயமாகிறான் ஊரார் களின் இதயமாகிறான் என்று காவியக் கவிஞர் வாலி எழுதிய வரிகளுக்கு ஏற்ப புதிய சூரியனாய் மு.க. ஸ்டாலின் உதயமாகிறார். முக்குலத்தோர் புலிப் படையின் சார்பில் அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்!

மாணவர் கழகப் பொறுப்பாளராக, இளைஞரணிச் செயலாளராக, மாநிலப் பொருளாளராக, சென்னை மேயராக, துணை முதல்வராக, செயல்தலைவராக, சட்டப்பேரவை உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக படிப்படியாக உயர்ந்து பரிமாணம் பெற்றவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

14வயது முதல் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தின் பாதையில் பயணம் செய்கிறவர், போராட்டக்களம், சிறைவாழ்க்கை, தியாகத் தழும்புகள் என இவரது தன்வரலாறு நீளும். அதுதான் இவரை இன்று தலைவர் சிம்மாசனத்தில் அமர்த்தியிருக்கிறது.

கலைஞர் எனும் கதிரவனின் கரம்பிடித்து நடந்து, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற சொற்றொடரை நெஞ்சில் எழுதி கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

எம் பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் செயல்முடியாத நிலை வந்த போது செயல்படும் தலைவராய் செயலாற்றி மக்கள் மனதில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே மு.க.ஸ்டாலின் தலைவராகி விட்டார்.

தமிழகம் இப்போது நெருக்கடியான அரசியல் சூழலில் நின்று கொண்டிருக்கிறது. இந்த அசாதாரண சூழலை இன்று தலைவராய் பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின் மாற்றுவார் நாம் மாற்றுவோம் என நான் நம்புகிறேன்.

பகுத்தறிவு, சமத்துவம், சமூக நீதி இம்மூன்றையும், முக்கோணமாக்கி அம்மூக்கோணத்தின் உச்சியில் நின்று தமிழருக்கான உரிமையை மீட்கும் பாசறையாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கிறது!

தலைவராய், பொறுப்பேற்றுள்ள தலைவர் மு.க.ஸ்டாலின் இயக்கத்தின் பாதையில் புதிய பூக்களை நடுவார்! எத்தனை உட்கட்சி இடர்பாடுகளையும் தலைமைப் பண்புகளோடு கடந்து செல்வார், இந்த ஆற்றல் அவருக்கு உள்ளது என்பதை நாம் அறிவோம்!

இன்று புதிதாய் பிறந்தோம் என்ற மகாகவியின் பாடலுக்கேற்ப இன்று புதிதாய் பிறந்தேன் என்று மு.க.ஸ்டாலின் உரைத்தது மிகப் பொருத்தமானதாகும். புதிய தலைவராய் பிறந்து கழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழக மக்களின் மலர்ச்சிக்கும் திசைகாட்டும் சூரியனாய் மு.க.ஸ்டாலின் இருப்பார் என்பது எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை!

பெரியார், அண்ணா, கலைஞர், என்ற திராவிட ஆலமரத்தில் மு.க.ஸ்டாலினும் ஒரு கிளையாக துளிர்க்கிறார் என்பது வரலாற்றுப் பொருத்தம் ஏனென்றால் 1944 ஆகஸ்ட் 27 ஆம் நாள் திராவிடர் கழகம் தோன்றியது. இன்று அதே ஆகஸ்ட் 27இல் மு.க.ஸ்டாலின் தலைவராக பொறுப்பேற்கிறார். வரலாற்றுச் சக்கரம் எப்போதும் கனக்கச்சிதமாக சுழலும்! அது நாளையும் சுழலும்!

கலைஞர் அவர்களின் கொள்கைத் தீபத்தை கையில் ஏந்தி நடக்கும் தலைவராய் மு.க.ஸ்டாலின் இன்று தலைவராகியுள்ளார். புதிய விடியல் பிறந்ததாய் நெஞ்சம் மகிழ்கிறது! தலைவர் ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிப்பதில் முக்குலத்தோர் புலிப்படை பெருமை கொள்கிறது!

●



# உண்டியல் குலுக்கினபோது...

கோவிலுக்குள் பெண்களை அனுமதிக்கக் கோரும் வழக்கால் கடவுள் சீற்றமடைந்ததன் விழைவாக இருக்குமோ இந்தமழைஎன்றுஅவர்கள் யாரும் கைகளைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ள வில்லை.

அவர்கள்நிறையப்பேர் அரபு நாடுகளில் வேலை செய்து நன்றாகச் சம்பாதிக்கிறவர்கள். நாம் உதவி செய்துதான் அவர்கள்வாழ வேண்டும் என்பதில்லை என்று யாரும் கைகளைக் கட்டிக்கொள்ளவில்லை.

மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகச் சொல்லி வருவார்கள். நம்மிடம் வசூல் செய்து இவர்களே பிரித்துக்கொள்வார்கள்என்று யாரும் கைகளை விரிக்கவில்லை.

தனிப்பட்ட முறையிலும், வணிகர் சங்கங்கள் சார்பிலும் ஏற்கனவேபணமும் பொருளும் அனுப்பியி ருக்கிறார்கள் என்றாலும் அதைச்சொல்லி யாரும் கைகளை உதறவில்லை.

வேண்டுகோள் அட்டைகளைப் பிடித்தபடி, தற்காலிக உண்டியலாக மாறியிருந்த பிளாஸ்டிக் டப்பாவை ஏந்தியபடி, பெரியகடைகள் முதல் சந்துகளுக்குள் சிறியகடைகள்வரை சென்றோம். யாரும் எங்களை ஏமாற்றத்துடன் அனுப்பவில்லை.

சாலையோரம் நின்றிருந்தபோது, பிராட்வே பேருந்து நிலையத்திற்குப் போய்க்கொண்டிருந்த ஒருவர் தானாகத் திரும்பி வந்து எங்கள் பிளாஸ்டிக் டப்பா உண்டியலில் காசு போட்டுப் போனார்.

ஒரு தேநீர்க் கடைக்காரர் உண்டியலில் பணத்தை இட்டதோடு, எங்கள் அனைவருக்கும் டீ வழங்கினார். கடும் வெயிலில் இந்தப்பணியைத் தொடர அது ஊக்க மருந்தானது. ஒரு கடையில் உரிமையாளரும் பணம் கொடுத்தார், ஊழியரும் பணம் கொடுத்தார்.

மழை வெள்ளம் உருக்குலைத்தாலும் உறுதியோடு வாழ்க்கையைஎதிர்கொள்ளும் கேரள மக்களுக்கு உதவிட முதலமைச்சர் அறிவித்துள்ள நிதியத்திற்காக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளம் கலைஞர்கள் சங்கத்தின் வடசென்னை மாவட்டக்குழு சார்பில் (ஆக.23) இந்த முயற்சிபாரிமுனை பகுதியில் மேற் கொள்ளப்பட்டது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர்கள்மணிநாத், ராஜேந்திரகுமார், தளவை இராசேந்திரன், தயாளன், கலைசேகரன் ஆகியோரோடு மாநிலச் செயற்குழு சார்பில் இரா.தெ.முத்து நான் பங்கேற்றோம். அப் பகுதிவியாபாரிகள்சங்கப் பொறுப்பாளர்கள்அன்வர், முருகன், நைனாமுகமது, குமார் உடன் வந்தது அறி முகத்தை எளிதாக்கியது.

சோர்வடையச் செய்துவிடலாம் என்றநினைப்பில் சுட்டெரிக்க வெயில் தன் திட்டத்தின் தோல்வியைக் கண்டு பதுங்கிக்கொண்டது. திட்டமிட்டபடி குறிப் பிட்ட நேரத்தில் திரட்டலை நிறுத்திக் கொண்டோம். பணத்தாள்களால் நிரம்பி, எங்கள் மனதையும் நிரப்பி சங்க அலுவலக மேசையில் கம்பீரத்தோடும் நெகிழ்ச்சி யோடும் வீற்றிருந்தது உண்டியல்.

**குமரேசன்**

# இந்தியத்தேசியத்திற்குள் தமிழ்த்தேசியம் இருக்கிறதா?

## அர்ஜுன் சம்பத் கட்டுரைக்கு மறுமொழி

"தினமணி" நாளிதழில் 01.08.2018 அன்று திரு. அர்ஜுன் சம்பத் எழுதிய "தமிழ்த்தேசியமும் இந்தியத் தேசியமும்" கட்டுரையில் தொல்காப்பியம், சங்க இலக் கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றில் "தமிழ்நாடு" என மொழியின் பெயரால் "ஒரு தனிநாடு - ஒரு தனித்தேசிய இனம் இருந்ததாகக் குறிப்பு இல்லை" என்று கூறியுள்ளார். "வெறும் மொழியின் அடிப்படையில் மட்டும் எந்தத் தேசிய இனமும் அடையாளம் காணப்படுவதில்லை" என்றும் எழுதியுள்ளார்.


தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

புதன்கிழமை 1-8-2018
விளம்பி ஆடி 16 ஹிஜ்ரி 1439 துல்கஃதா 18

தமிழ் தேசியமும் இந்திய தேசியமும்

அர்ஜுன் சம்பத்

சங்க இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும், வரலாறுகளிலும், புராணங்களிலும், கல்வெட்டுகளிலும் 'தமிழ்நாடு' என்று ஒன்று இருந்ததாக எங்கும் குறிப்பிடப் படவில்லை. தமிழ் தேசியம் என்று தனியாக ஒன்றும் கிடையாது. அது இந்திய தேசியத்தின் ஓர் அங்கமே.


அர்ஜுன் சம்பத் தாம் கூறும் இந்துத்தேசியம் அல்லது இந்தியத்தேசியம் இரண்டிற்கும் இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் எதுவும் தரவில்லையே ஏன்? ஏனெனில், இந்து என்பதும், இந்தியா என்பதும் மிகவும் பிற்காலத்தில் மேற்கத்தியர் சூட்டிய பெயர்கள்! தமிழ், சமற்கிருதம், இந்தி உள்ளிட்ட எந்த மொழியிலும் இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்து என்ற மதப்பெயரும், இந்தியா என்ற நாட்டுப் பெயரும் கூறப்படவில்லை. கூறப்படாத தற்குக் காரணம் இந்து என்ற பெயரில் மத மோ, இந்தியா என்ற பெயரில் நாடோ, இந்தியர் என்ற பெயரில் இனமோ 200 ஆண்டுகளுக்கு முன் இல்லாதது தான்!

இதோ காலஞ்சென்ற பெரியவர் காஞ்சி சங்கராச் சாரியார் சந்திரசேக ரேந்திரர் கூறுகிறார் :

"நமக்குள் சைவர்கள், வைஷ்ணவர்கள் என்று வேறாகச் சொல்லிக் கொண்டிருந்தாலும் வெள்ளைக் காரன் நமக்கு ஹிந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது".

*- தெய்வத்தின் குரல், பாகம் - 1, பக்கம் 267.*

**பெ.மணியரசன்**



சந்திரசேகரேந்திரர்

மேலும் சொல்கிறார் :

"எத்தனையோ கிருத்திருமங்கள் செய்து பாகிஸ்தானைப் பிரித்த அதே வெள்ளைக்காரன்தான், எத்தனையோ யுக்திகள் செய்து நம்மை ஆரியர் திராவிடர் என்றெல்லாம் பேதப்படுத்திய அதே வெள்ளைக்காரன் தான் தன்னையும் அறியாமல் நமக்கு 'ஹிந்து' என்று பொதுப் பெயரைத் தந்து, இன்று இந்தியதேசம் என்று ஒன்று இருக்கும்படியான மகாபெரிய நன்மையைச் செய்திருக்கிறான்".

*- அதே நூல், அதே பக்கம்.*

பழங்காலத்தில் "பாரததேசம்" என்ற பெயரில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரு தேசமாக இருந்ததாக ஒரு சாரார் சொல்லி வருகிறார்கள். அதற்கான இதிகாசச் சான்று, புராணச் சான்று, வரலாற்றுச் சான்று எதுவுமில்லை!

இன்று இந்தியா என்று சொல்லப்படும் நிலப்பகுதியில் பழங்காலத்தில் 56 தேசங்கள் இருந்ததாக "மகாபாரதம்" கூறுகின்றது.

1918இல் வெளிவந்த, "புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்" என்ற நூலில் அதன் ஆசிரியர் பி.வி. ஜகதீச ஐயர், 56 தேசங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். அதில், குருதேசம், சூரசேனதேசம் என்று தொடங்கி 56 ஆவது தேசமாக கர்னாடக தேசம் குறிப்பிடப்படுகிறது. அந்த 56இல் சீனதேசம், பாஞ்சாலதேசம், பாரசீக தேசம், காந்தார தேசம், காம்போஜ தேசம், சோழ தேசம், பாண்டிய தேசம், கேரள தேசம் போன்றவை இருக்கின்றன. ஆனால், பாரததேசம் என்பது இல்லை!

வெள்ளைக்காரக் கிழக்கிந்திய கம்பெனி - தான் கைப்பற்றிய தனித்தனி நாடுகளை ஒற்றை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர முதல் முதலாக 1773-இல் இந்தியா ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act of 1773) இயற்றியது. அதற்கு முன் இந்தியா என்ற பெயரிலோ அல்லது பாரதம் என்ற பெயரிலோ இந்த நிலப்பகுதி ஒரே நாடாக - ஒரே தேசமாக இருந்ததே இல்லை! வெள்ளைக்காரர் உள்ளிட்ட மேற்கத்தியர் சிந்து ஆற்றின் பெயரை அடையாளமாகக் கொண்டுதான் இந்தியா, இந்து என்ற பெயர்களை உருவாக்கினார்கள்.

**இலக்கியங்களில் தமிழ்நாடு**

தமிழ்நாடு என மொழியின் பெயரில் ஒரு நாடு, ஒரு தேசிய இனம் இருந்ததாக இலக்கியக் குறிப்பு இல்லை என்கிறார் அர்ஜூன் சம்பத். இதோ இருந்ததற்கான சான்றுகள் :

"வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்.."

*- புறநானூறு, 168.*

"தமிழகப் படுத்த விமிழிசை முரசின்.."

*- அகநானூறு, 227.*

"தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகம் எல்லாம்.."

*- பரிபாடல், 410.*

"இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய.."

*- சிலப்பதிகாரம், காட்சிக்காதை, 165.*

"தென் தமிழ்நாட்டு அதன் பொதியில்.."

*- கம்பராமாயணம், சுக்ரீவன் கூற்று.*

"தமிழ்நாட்டில் போனார் ஞானத் தலைவர்"

*- சேக்கிழார், பெரிய புராணம், 21 திருநாவுக்கரசு நாயனார் புராணம் பகுதி, பாடல் எண் - 289.*

"அரும்பெறல் தமிழ்நாடுற்ற தீங்கினுக்கு"

*- பெரிய புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் பகுதி, பாடல் எண் - 604.*

தொல்காப்பியத்தில் "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" என்பது 496ஆம் நூற்பா. வினாவும் அதற்கான விடையும் தவறில்லாமல் - குழப்பமில்லாமல் இருக்க வேண்டும் என்பது இதன் பொருள். இதற்கு உரை எழுதிய இளம்பூரணர் குழப்பமில்லாத வினாவுக்கும் விடைக்கும் ஓர் எடுத்துக்காட்டு கூறினார்.

"எடுத்துக்காட்டாக, நும்நாடு யாது என்றால் தமிழ்நாடு என்றல்" என்று கூறினார்.

உன் நாடு எது என்றால் சோழ நாடு, பாண்டிய நாடு என்று சொல்வது குழப்பமானது. அப்பெயர்கள் அரச பரம்பரை சார்ந்த ஆட்சிப் பகுதிகள். அவை நாடன்று; தமிழ்நாட்டில் பல்வேறு அரசர்களின் ஆட்சி இருக்கிறது என்ற பொருளில்தான் இந்த எடுத்துக்காட்டை இளம்பூரணர் கூறுகிறார்.

தமிழர் என்ற இனப்பெயர் சங்க இலக்கியம் தொட்டு, பல்வேறு இலக்கியங்களில் காணப்படுகிறது.

"தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானத்து"

*- புறம், 19.*

தலையாலங்கானம் என்ற இடத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் சேர, சோழ - தமிழ்ப் படைகளை வென்றான். இரு தரப்பிலும் தமிழர்கள் போரிட்டனர். எனவே யார் எந்தப் பக்கம் போரிடுகின்றனர் என்பது குழப்பமாயிருந்தது. இங்கு தமிழ் என்றது தமிழரைக் குறித்தது.

"செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னர்" என்று "தமிழ்" என்பதைத் தமிழர் என்ற பொருளில் கூறினார் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்.

**இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை ஒருதேசம்(Nation) என்று கூறவில்லை. அரசுகளின் ஒன்றியம் (Union of States) என்றுதான் குறிப்பிடுகிறது (உறுப்பு - 1). 'இந்தியன்' (Indian) என்ற பெயரில் ஒரு தேசிய இனம் இருப்பதாக இந்திய அரசமைப்புச் சட்டம் கூறவில்லை. இந்தியக் குடியுரிமை (Citizenship) பற்றி மட்டுமே அது வரையறை செய்கிறது. இல்லாத இந்திய தேசியத்தை - இந்து தேசியமாக மாற்றிக் •கொண்டு, தமிழ்த்தேசிய இனம் போன்ற இயற்கையான இனங்களின் மொழி, பண்பாடு, அரசுரிமைகள் முதலியவற்றை மறுக்கக் கூடாது. இந்தியா ஒரு நிர்வாகக் கட்டமைப்பு; அதில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன.**

அதன்பிறகு - வந்த அப்பர் (திருநாவுக்கரசர்) "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்று ஆரியரும், தமிழரும் வெவ்வேறு இரு இனத்தார் என்பதைத் தெளிவாகக் கூறினார். பூதத்தாழ்வார் "இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன், பெருந்தமிழன் நல்லேன் பெரிது" என்று தன்னைப் பெருந்தமிழனாகக் கூறி பெருமைப் பட்டார்.

எனவே இலக்கியங்களில் தமிழர் என்ற இனம் குறிக்கப்படவில்லை என்று அர்ஜூன் சம்பத் கூறுவது சரியன்று!

### தேசிய இன வரையறை

"வெறும் மொழியின் அடிப்படையில் மட்டும் தேசிய இனம் அமையாது" என்கிறார் அர்ஜூன் சம்பத். ஆனால், இவர் சார்ந்துள்ள இந்துத்துவா அமைப்பு, இல்லாத இந்தியத்தேசிய இனத்திற்கு இந்தி மற்றும் சமற்கிருதம் இரண்டையும் ஏற்றாக வேண்டும் என்று நிபந்தனை போடுகிறது. இனம் (Race), தேசிய இனம் (Nationality) ஆகியவை உருவாவதற்கான முதன்மைக் கூறு தாய் மொழி! கிரேக்கர், ஆங்கிலேயர், பிரஞ்சியர், சப்பானியர் போன்ற தேசிய இனங்கள் அவரவர் தாய்மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாகின. அர்ஜூன் சம்பத் சொல்வதுபோல், மொழி வெறும் கருவியன்று!

தாய்மொழி, தாயகம், பண்பாடு, பொருளியல் வாழ்வு ஆகியவற்றில் பொதுத்தன்மை கொண்டு, வரலாற்றில் நிலைத்து வாழ்பவர்கள் "நாம் ஓரினம்" என்ற மனப்பாங்கு வளரப் பெறுகின்றனர். இதற்கு முன் நிபந்தனையாக இனக்குழு (Ethinicity) மரபு உருவாகிறது. இனக்குழு மரபி லிருந்து ஒரு மூல மொழி தொடர்கிறது. தமிழர் களுக்கு மூலமொழியாகவும் (Dialect) வளர்ச்சியடைந்த பொது மொழியாகவும் (Standard Language) இருப்பது தமிழே!

தேசிய இன அடிப்படையில் இறையாண்மையுடன் தனித்தனி தேசங்கள் அமைவது 18 - 19ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. அதனால், தேசிய இன உணர்வே அதன்பிறகுதான் உருவானது என்று கொள்ளக் கூடாது. யூதர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இன உணர்வு இருந்தது. தமிழர்களுக்கு மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்பே இன உணர்வு இருந்ததால்தான், இன அடிப்படையிலான தாயக எல்லையாக வடவேங்கடம் குமரிமுனை இடையிலுள்ள தமிழ் பேசும் பகுதியை தொல்காப்பியம் பாயிரத்தில் பணம்பாரனார் கூறினார். அதேபோல், தமிழகம் - தமிழ்நாடு - தமிழர் என்ற இன உணர்வு வெளிப்பாடுகள் சங்க இலக்கியத்திலிருந்து தமிழர்களுக்குத் தொடர்கிறது.

மதம் ஒரு தேசியத்திற்கோ அல்லது தேசிய இனத் திற்கோ அடிப்படைக் கூறாக அமைவதில்லை. மதம் - ஒரு மெய்யியல் என்ற அளவில் இனம் கடந்து, மொழி கடந்து பரவும். ஐரோப்பா ஒரே கிறித்துவ தேசமாக அமையவில்லை. அரபு நாடுகள் ஒரே இசுலாமிய தேசமாக அமையவில்லை. மதம் ஒன்றாக இருந்தாலும், மொழி இன அடிப்படையில் அவை தனித்தனி நாடுகளாக இருக்கின்றன. அரசமைப்புச் சட்டத்திலேயே இந்து மதத் திற்கு முதன்மை கொடுத்த இந்து நாடு - நேப்பாளம்! இப்போது புதிதாக வந்துள்ள அரசமைப்புச் சட்டத்தில் தான் அப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது. ஆனால், "இந்துதேசம்" என்று இந்தியாவை அழைக்க விரும்புவோர் நேப்பாளமும் இந்தியாவும் தனித்தனி நாடாக இருப்பதை உணர வேண்டும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை ஒரு தேசம் (Nation) என்று கூறவில்லை. அரசுகளின் ஒன்றியம் (Union of States) என்றுதான் குறிப்பிடுகிறது (உறுப்பு - 1). 'இந்தியன்' (Indian) என்ற பெயரில் ஒரு தேசிய இனம் இருப்பதாக இந்திய அரசமைப்புச் சட்டம் கூறவில்லை. இந்தியக் குடியுரிமை (Citizenship) பற்றி மட்டுமே அது வரையறை செய்கிறது.

இல்லாத இந்திய தேசியத்தை - இந்து தேசியமாக மாற்றிக் கொண்டு, தமிழ்த்தேசிய இனம் போன்ற இயற்கையான இனங்களின் மொழி, பண்பாடு, அரசுரிமைகள் முதலியவற்றை மறுக்கக் கூடாது. இந்தியா ஒரு நிர்வாகக் கட்டமைப்பு; அதில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன.

*(பின் குறிப்பு : அர்ஜூன் சம்பத் கட்டுரைக்கு மறு மொழியாக, அக்கட்டுரை வந்த மறுநாளே (02.08.2018) இக்கட்டுரை தினமணிக்கு அனுப்பப்பட்டது. "தினமணி" இதழ் இக்கட்டுரையை வெளியிடாததால், 09.08.2018 அன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப் பட்டது).*

●

தோழர்களே! பார்ப்பனீய பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சாரம் துவங்கிவிட்டது. எந்தப் பிரச்சினையைப் பற்றியும் எந்தப் புரிதலும் இல்லாத இன்னொரு சினிமா நடிகர் ஏதேதோ பேசுகிறார் இங்கே, சேலம் சென்னை எட்டு வழிச்சாலை, கூடங்குளம் அணுமின் நிலையம், ஸ்டெர்லைட், குளச்சல்/குமரி துறைமுகம் எனும் நான்கு கார்ப்பரேட் வளர்ச்சித் திட்டங்களை ஆதரிக்கும் இந்த சிரிப்பு நடிகர், என்னை மட்டும் "உதயகுமார்" எனப் பெயர் குறிப்பிட்டு தாக்கி, கெட்ட நோக்கத்துடன், மன உளைச்சல் ஏற்படுத்தும் விதத்தில் அவதூறாகப் பேசுகிறார்.

அந்த உதயகுமார் ங்கிறவரு யாருக்கிட்ட காசு வங்கினாரோ எனக்குத் தெரியல" என்று சொல்லி விட்டு எதையோ விழுங்கி விழுங்கிப்பேசி எனது நற்பெயருக்கும் கண்ணியத்துக்கும் மாண்புக்கும் களங்கம் விளைவிக்கிறார். நடக்காத ஒன்றை எந்த நிரூபணமும் தராமல், வேண்டுமென்றே திரும்பப் பேசி மக்கள் மனங்களில் நச்சை விதைக்கிறார். இது எனது மற்றும் எனது குடும்பத்தாரின் பாதுகாப்புக்கு பெரும் குந்தகமாக அமைகிறது. இந்த அச்சுறுத்தல் குறித்து எனது வழக்கறிஞர்களோடு விவாதித்துக் கொண்டிருக் கிறேன். விசு மேற்குறிப்பிடும் தன்னுடைய காணொ லியில் என்னுடைய பெயரை, உடனடியாக நீக்கிவிட்டு மூன் று நாட்களில் என்னிடம் நேரடியாக வருத்தம் தெரிவிக்காவிட்டால் விசுவின் மீதும் விசுவை இயக்கும் சக்திகளின் மீதும் போலீஸ் மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுப்பேன் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

"ரொம்ப நாளா போராடிக்கிட்டிருந்தாரு"

என்று சொல்லி ஏதோ நான் மட்டும் இவருடைய சினிமாப் பாணியில் தனிமனிதனாக நின்று போரா டியது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்க விழைகிறார் நடிகர் விசு. என்னுடன் பல்லாயிரக் கணக்கான மீனவர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் நின்று போராடியதை வசதியாக மறைக்கிறார்.

ஆனா, இப்ப அந்த கூடங்குளம் எவ்வளவு ஜம்முனு நடந்துட்டிருக்குன்னு போய் பார்த்தீங்களா? என்று கேள்வி கேட்கிறார் இந்த அரைவேக்காடு விசு. முதலில் நீர் பார்த்தீராய்யா விசு? தற்போது கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இரண்டு உலைகளுமே மூடிக்கிடக்கின்றன என்பது இந்த விசுவுக்குத் தெரியாது. எதையும் தெரிந்து பேச வேண்டும் எனும் அடிப்படை அறிவு கூட இல்லா தவர்கள் பொதுப் பிரச்சனைகள் பற்றிப் பேச வந்திறங்குகிறார்கள்!

"உதயகுமார் ரூம்ல வந்து படுக்கையைப் போட்டு படுத்துட்டு போர்வையை விரிச்சு தூங்கிட்டார்னா எப்படி? என்று கேள்வி கேட்கிறார். இந்தப் பெரும் போராளி விசு, விசு சினிமாவிலும், டிவியிலும், விளம்பரங்களிலும் நடித்து கோடிகோடியாக சம்பாதித்து கொழுத்துக் கொண்டிருக்கும்போது, இந்த உதயகுமார் ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளாக எந்தவதிமான பிரதிபலனும் பாராமல் தனது அறிவு, நேரம், சக்தி, பணம், உழைப்பு என அனைத்தையும் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக செலவழித்துக் கொண்டிருந்தான். இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு இடிந்தகரையிலிருந்து வெளிவந்த பிறகுகூட இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கிறான் உதயகுமார். பொதுவெளியில் மக்களோடு மக்களாக! எவனோ போடும் பிச்சைக்காக அல்ல. விசு போன்ற இடைத்



# விசு கக்கும் விசம்!

**விசு இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தார்? என்ன செய்துகொண்டிருந்தார்? இடிந்தகரைக்கு கூடங்குளத்துக்கு வந்து அணுஉலைக்கு ஆதரவாக போராடியிருக்கலாமே? ஏன் இப்போதுகூட தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேலம் போன்ற ஊர்களுக்குப் போய் இவர் வக்காலத்து வாங்கும் “வளர்ச்சித் திட்டங்களுக்கு” ஆதரவாக மக்களிடம் பேசலாமே? கோடம்பாக்கத்து கேமிராவுக்குப் பின்னால் ஒளிந்து நின்று ஒப்பாரி வைப்பது ஏன்? இந்த நடிப்புக்கு எவ்வளவு பணம் தந்தார்கள் பா.ஜ.க.வினர் விசு?**

தரகர்கள் நான்கு முறை என் வீட்டுக்கு வந்து விலை பேசினார்கள் போராட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொள், கேட்பதைத் தருகிறோம் என்று. இது பற்றி விரிவாகப் பேசுவோமா? நாராயணசாமி முதல் நரேந்திர மோடி வரை யார் வந்தாலும் பேச நான் அணியமாக இருக்கிறேன்.

விசு இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தார்? என்ன செய்துகொண்டிருந்தார்? இடிந்தகரைக்கு கூடங்குளத்துக்கு வந்து அணுஉலைக்கு ஆதரவாக போராடியிருக்கலாமே? ஏன் இப்போதுகூட தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேலம் போன்ற ஊர்களுக்குப் போய் இவர் வக்காலத்து வாங்கும் “வளர்ச்சித் திட்டங்களுக்கு“ ஆதரவாக மக்களிடம் பேசலாமே? கோடம்பாக்கத்து கேமிராவுக்குப் பின்னால் ஒளிந்து நின்று ஒப்பாரி வைப்பது ஏன்?

இந்த நடிப்புக்கு எவ்வளவு பணம் தந்தார்கள் பா.ஜ.க.வினர் விசு?

இலவசமாக பிரச்சாரம் செய்கிறீர் என்றால், நேரில் வந்து மக்களிடம் பேச திராணி இருக்கிறதா, விசு? கூடங்குளம் திட்டம் பற்றி நாமிருவரும் மட்டும் பொதுவெளியில் ஒரு விவாதம் நடத்துவோமா விசு? வருவீரா? அல்லது நான் வருகிறேன். எங்கே, எப்போது வரவேண்டும் என்று சொல்லும்! வருகிறேன், மக்களோடு நின்று விவாதிப்போம்!

எல்லோரும் படிக்க வேண்டும், எல்லோருக்கும் சமவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றெல்லாம் அற்புதமான சமூகநீதி பேசும் இந்த நவீன சினிமாப் பெரியார், எல்லா மனிதர்களையும் சமமாக நடத்தாத பார்ப்பனீயத்தின் கையாளாக வேலை பார்த்தவாறே அதைச் செய்வதுதான் வேடிக்கை. இதையெல்லாம் சாமர்த்தியமாக மறைப்பது போன்று நடித்து தோற்கிறார், பாவம்!

“புதுசா ஒரு கான்சப்ட் வந்திருக்கு, அது ஏன் வந்திருக்குன்னு எவ்வளவு தூரம் யோசிச்சுப் பார்த்தாலும், அது ஏன்னு எனக்குக் காரணம் புரியல“ என்று தனது அறியாமையை ஒத்துக்கொள்கிறார் விசு. இது புரிவதற்கு முதலில் இதயம் வேண்டும் விசு, அதில் கொஞ்சம் உண்மை வேண்டும், கூடவே சொந்தமாக சிந்திக்கும் திறன் வேண்டும். உதட்டளவில் மட்டுமல்ல, உள்ளுக்குள்ளும் அனைத்து மனிதர்களையும் சமமாக நடத்தும் தத்துவார்த்தப் பார்வை, நேர்மை, கருணை வேண்டும்.

கூலிக்கு மாரடித்தே பழகிப் போய்விட்ட உம்மிடம் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாதுதான். நடித்தே வாழ்க்கையைக் கழித்தாயிற்று, நன்கு சம்பாதித்தாயிற்று, இனி ஓய்வெடுங்கள் விசு, இந்தத் தள்ளாத வயதில் விபரீத சமூகபொருளாதார அரசியல் பரிசோதனைகள் வேண்டாம் உடல்நலம் வேறு நன்றாக இல்லாதது போல் தோன்றுகிறது!

கடைசியாக, காணொளியில் என் பெயரை நீக்கி விட்டு வருத்தம் தெரிவியுங்கள். அல்லது எங்காவது போலீஸ் ஸ்டேஷனில் அல்லது கோர்ட்டில் நேரில் சந்திப்போம்.

அன்புடன்,<br>
**சுப. உதயகுமாரன்**<br>
பச்சைத் தமிழகம் கட்சி


**விளம்பர கட்டண விபரம்**

| | |
|---|---|
| **முன்னட்டை உள்ளே (முழுபக்கம்)** | **ரூ.** 7,000/- |
| **பின்னட்டை உள்ளே (முழுபக்கம்)** | **ரூ.** 7,000/- |
| **பின்னட்டை (முழுபக்கம்)** | **ரூ.** 10,000/- |
| **கருப்புவெள்ளை (முழுபக்கம்)** | **ரூ.** 5,000/- |

## தேசப்பற்று

கேரள துயரத்திற்கு நன்கொடை வழங்கியுள்ள மாநிலங்களின் பட்டியலை பாருங்கள். மிக மிக தவிர்க்க முடியாத, மோசமான கண்ணோட்டத்தை வெளிப் படுத்தும் உண்மையை காணலாம்.

தெலுங்கானா - 25 கோடி (TRS)
டெல்லி - 10 கோடி (AAP)
கர்நாடகா - 10 கோடி (INC/JDS)
பஞ்சாப் - 10 கோடி (INC)
ஆந்திரா - 5 கோடி (TDP)
ஒடிசா - 5 கோடி (BJD)
தமிழ்நாடு - 10 கோடி (AIADMK)
பாண்டிச்சேரி - 2 கோடி (INC)
மேற்கு வங்காளம் - 10 கோடி (TC)
பீஹார் - 0 (JDU/BJP)
சட்டிஸ்கர் - 0 (BJP)
கோவா - 0 (BJP)
குஜராத் - 0 (BJP)
ஹரியானா - 0 (BJP)
இமாச்சல் பிரதேசம் - 0 (BJP)
ஜார்கண்ட் - 0 (BJP)
மத்தியப் பிரதேசம் - 0 (BJP)
மகாராஷ்டிரா - 0 (BJP)
நாகாலாந்து - 0 (Mostly BJP)
ராஜஸ்தான் - 0 (BJP)
உத்திரப் பிரதேசம் - 0 (BJP)
உத்தரகாண்ட் - 0 (BJP)
ஜம்மு காஷ்மீர் - 0 (governar rule)

கேரள துயரத்திற்கு ஒரு நயாப் பைசா கூட நன்கொடை தராத அனைத்து மாநிலங்களும் பிஜேபி – ஆர்.எஸ். எஸ்.ஆட்சி செய்யும் மாநிலங்கள் தான்.

மேற்படி காவி பக்தா கும்பல்தான் தேசபக்த வேசத்தை ஒவ்வொரு நொடியிலும் போடுகிறார்கள். ஓயாமல் மற்றவர் களுக்கு வகுப்பு எடுக்கவும் செய்கிறார்கள்.

## புலிகள் நினைத்தால்தான் கர்ப்பம்

உலகிலேயே முதல்முறையாக மத்தியப் பிரதேசம் விந்திய மலைத்தொடரின் பன்னா வனத்தில் முற்றிலுமாக அழிந்து போன புலிகள் இனத்தை மீண்டும் உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர். விஞ்ஞானிகளும் வன அதிகாரி களும். இந்தச் சாதனைக்கு சொந்தக்காரர்களில் குறிப்பிடத் தக்கவர் ஒரு தமிழர் என்பது கூடுதல் பெருமை.

கடந்த நூற்றாண்டில் உலகில் சுமார் ஒரு லட்சம் புலிகள் இருந்தன. அதில் இந்தியாவில் இருந்தவை சுமார் 60 ஆயிரம், இன்று உலகில் இருக்கும் புலிகளின் எண்ணிக்கை 3,500-ஐ தாண்டாது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் இரு:ககும் புலிகளை எண்ணிக்கை 1,706 மட்டுமே.

இந்தியாவில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் மட்டுமே புலிகள் வசிக்கின்றன. இந்தியாவில் புலிகள் அழிந்த–அழிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று மத்திய பிரதேசத்தின் விந்தியமலைத் தொடர் பன்னா வனப்பகுதி. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அப்பகுதியில் 400–க்கும் மேற்பட்ட புலிகள் வசித்தன. இது வன உயிரியல் மாபியாக்களின் கண்களை உறுத்தின அதைத் தொடர்ந்து அப்பகுதி, புலிகள் வேட்டை மாபியாக்களின் சொர்க்க பூமியானது. குறிப்பாக, வட இந்தியாவின் பாரம்பரிய புலி வேட்டைக்காரர்கள் அங்கு இருந்த மொத்தப் புலிகளையும் வேட்டையாடித் தீர்த்தனர். ஒருகட்டத்தில் அங்கு புலிகள் இனமே அழிந்துபோனது. அரசு மேற்கொண்ட திட்டங்கள் பலன் தரவில்லை.

புலிகள் மறு உருவாக்கம் என்பது அரிதினும் அரிதாகவே வெற்றி பெறக்கூடிய திட்டம். ஏனெனில் அதன் வாழ்க்கை முறை. அதன் மீதான வேட்டைகள், மனிதன்–புலி மோதல்கள். மேலும் புலிகள் தூண்டப்பட்ட சினை முறை மூலம் கர்ப்பம் தரிக்கின்றன. அதாவது, ஒரு பெண் புலி, பல ஆண் புலி களுடன் பல முறை இணை சேர்ந்தாலும் அதுவாக விரும்பி னால் மட்டுமே கருத்தரிக்கும். இது பூனைகள் குடும்பத்துக்கும் சில நாய்கள் குடும்பத்துக்கும் உரிய உயிரியல் உண்மை. இதனால், புலிக்குட்டிகள் உயிர் வாழும் வாய்ப்பு 50 சதவீதத்துக்கும் குறைவே.

ராஜஸ்தானின் சரிஸ்கா புலிகள் காப்பகம், தென் ஆப்பிரிக்கா உள்பட உலகின் பல வனங்களில் இது போன்ற திட்டங்கள் முயற்சி செய்து பார்க்கப்பட்டாலும் அவை வெற்றி பெறவில்லை. அந்த சூழலில்தான் இந்திய வன உயிரி ஆராய்ச்சி நிலையம் இத்திட்டத்தை 2008ஆம் ஆண்டு தொடங்கியது. ரமேஷ் என்ற தமிழர் இதற்கு தலைமை தாங்கினார். மொத்தம் 543 சதுர கி.மீ. கொண்ட பன்னா வனப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வில் அங்கு சராசரியாக ஒரு சதுர கி.மீ.பரப்பில் 45 மான்கள் வரை இருப்பது தெரிந்தது. அதன்படி இங்கு 25 முதல் 35 புலிகள் வரை வசிக்கலாம். இதுவரை இங்கு ஆறு புலிக்குட்டிகள் இறந்துள் ளன. புலிக்குட்டிகளின் உயிர்வாழும் சாத்தியம் 50 சதவீதம் தான். ஆனால், பன்னாவில் அது 83 சதவீதமாக உயர்ந்துள் ளது. இந்த சதவீதம் ஓர் உலகச் சாதனை.

கேரளா நூறு சதவீத எழுத்தறிவு பெற்ற மாநிலம். உலகின் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் சொர்க்கம். பசுமை நிறைந்த பூமி. இன்னும் பல்வேறு சிறப்புகளுக்கு பெயர்போனது.

இன்றோ வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. இது சோகம் தான். அணை திறந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட கோர அழிவிலிருந்து தப்பிக்க ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன், சிறுவர், பெரியோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் போராடுகிறார்கள். எனக்கு அனைவரும் சமமே என சொல்லாமல் சொல்லியுள்ளது இயற்கை.

மழை வெள்ளம் ஒருபுறம், நிலச்சரிவுகள் மறுபுறம், பலத்த காற்று வீசும் என்ற வானிலை எச்சரிக்கை இன்னொரு புறம். அன்றாடம் அறிவிக்கப்பட்ட சாவு என்ற வானிலை எச்சரிக்கை இன்னொரு புறம். அன்றாடம் அறிவிக்கப்பட்ட சாவு எண்ணிக்கை கல்மனம் கொண்டோரையும் கண்கலங்க வைத்துள்ளது.

பள்ளிக்கூடம், கல்லூரி, சமூகக்கூடம், திருமண மண்டபமென முகாம்களில் மக்கள் தஞ்சமடைந்தாலும் நிறைய குடும்பங்களின் எதிர்காலக் கனவுகள் கேள்விக்குறி. உலகின் மூலை முடுக்கெல்லாம் கேரளத்தவர் இருப்பர் என மகிழ்வோடு கூறுவோர். இன்று ஆறுதல் கூற வார்த்தைகளின்றி வாயடைபட்டு தவிக்கின்றனர்.

பல்லாயிரக்கணக்கான போலீசார். தீயணைப்பு வீரர்கள், கடற்படை, விமானப்படை, கடலோர காவல்படை குழுக்கள், தேசிய பேரிடர் மீட்புப்படை, ராணுவ வீரர்கள் களத்தில் மக்களை மீட்க போராடுகிறார்கள். இத்தோடு ஹெலிகாப்டர்களும், தேசிய பேரிடர் மீட்புக்குழுவின் படகுகளும், மீன்வளத்துறைக்கு செந்தமான படகுகளும் இரவு பகலாக களத்தில் நிற்கின்றன.

பிரதமர், கேரள கவர்னர், கேரள முதல்மந்திரி ஆகியோர் வெள்ள பாதிப்பையும், மீட்பு பணியையும் நேரில் பார்வையிட்டது, களத்தில் மக்களை காப்பாற்ற போராடும் முப்படையினரையும் பிறரையும் உற்சாகப்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் போதிய நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பது நியாயமான வேண்டுதல். இயற்கை பேரிடரால் ஏற்படுகின்ற அழிவுகளும் உயிரிழப்புக்களும் தவிர்க்க முடியாதவை.

சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், அரசின் பல துறையினர் என பலராலும் தமிழகத்தில் இருந்து கொடுக்கப்படும் நிவாரண பொருட்கள் ஏராளம். தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும், வரும் செய்திகளைப் பார்த்து பலரும் தங்களது வருத்தத்தை தெரிவிப்பதும். லட்சங்களும், கோடிகளும் நிவாரண



# மனிதநேயம் போற்றிய தமிழக மீனவர்கள்



பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பதை ஏற்கனவே நிரூபித்த இந்த ஆழ்கடல் சுறா வேட்டைக்காரர்களின், தற்போதைய தக்க சமயத்து உதவியின் மூலம் பலர் உயிர் பிழைத்துள்ளதை இந்த அகிலமே கண்கூடாகக் கண்டுள்ளது. இம்மீனவர்களின் ஈரமான இதயத்துக்கு நிகர் உண்டோ?

தக்க சமயத்தில் கடவுளாக வந்து என்னை காப்பாற்றியுள்ளீர். எனக்கு பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தால் உங்கள் பெயரைத்தான் சூட்டுவேன் என தன்னை காப்பாற்றிய மீனவ ரைப்பார்த்து ஒரு கர்ப்பிணிப்பெண் கூறியதா கவும் ஒரு செய்தி.

மாக வந்து குவிவது ஒருபுறம் இருந்தாலும். உயிருக்குப் போராடியவர்களை மீட்க எவ்வித எதிர்பார்ப்புமின்றி தங்களது உயிரையும் பொருட் படுத்தாமல் களப்பணி புரிகின்ற மீனவர்களை பாராட்ட வார்த்தை இல்லை.

இயற்கையின் சீற்றங்களால் இழந்தது போக மிச்சமிருப்பவை சீரிய சிந்தனையும் எதிர்கால நம்பிக்கையும் தான். வானமே கூரையென்றும் பூமியே மெத்தையென்றும் இரண்டு கைகளுமே தலையணை யென்றும் வைத்துக்கொண்டு உடைந்த நெஞ்சங்க ளோடு உயிர் வாழ்ந்து கொண்டிருந்த, ஆழ்கடல் மீன்பிடிப்பில் உலகப்புகழ் பெற்ற குமரி மாவட்டத்தின் தூத்தூர் மண்டல மீனவர்களை, இயற்கையினால் கட்டிப்போட முடியவில்லை.

தங்களது படகுகளுடன் கேரளா விரைந்தனர். குமரி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே, காவல்துறையினர் மற்றும் மீன்வளத்துறையினர் அளித்த உற்சாகத்தால் மேலும் பலர் இவர்களோடு சேர்ந்து கொண்டனர்.

காலை முதல் நள்ளிரவு வேளை அயராது தொடர்ந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர். குடிசை களிலும் அடுக்குமாடி வீடுகளின் முகப்பிலும் நின்று கதறிய சிறுவர் சிறுமியரை தோளிலும், பெரியவர்களை இரண்டு மூன்று பேர் சேர்ந்து கைத்தாங்கலாகவும் மீட்டு பாதுகாப்பான இடங்களில் சேர்த்துள்ளனர். இவர்களால் ஆனந்த கண்ணீர் வடித்த கர்ப்பிணிகள், முதியோர், குழந்தைகள் ஏராளம்.

உங்கள் மீனவர்கள் செய்யும் சேவைக்கு நிகர் இல்லை. பல உயிர்களைக் காப்பாற்றி வருகிறார்கள். டி.வி.யில் பார்த்தேன் என்று என் வெளிநாட்டு நண்பர் ஒருவர் நள்ளிரவில் தொடர்பு கொண்டு பேசியபோது அகம் மகிழ்ந்தேன்.

கடலையே வீடாக நினைத்து பலநாட்கள் ஆழ்கடலில் தங்கி மீன்பிடிப்பதன் மூலம் அந்நிய வருவாயை அதிகமாக ஈட்டி, நம் தேசத்தின்

கேரளாவில் மீன்பிடிக்க திடீர் கட்டுப் பாடுகள், குறிப்பிட்ட மீன்களை பிடிக்கக்கூடாது. மீன்பிடிக்க அதிக வரி என அவ்வப்போது ஏற்படுகின்ற கசப்பான அனுபவங்களை நமது மீனவர்கள் மறந்தார்கள். மனித நேயத்தோடு இணைந்தார்கள். பலரது இதயங்களையும் வென்றார்கள்.

கடவுளின் தேசம் என்று பலராலும் வர்ணிக்கப் பட்ட கேரளா இயற்கையின் சீற்றத்தால் நிலைகுலைந்த உடன், கேரளத்தின் ராணுவம் மீன்பிடித் தொழிலா ளர்கள் தான் என்ற கேரள முதல்வரின் கூற்று, நம் மீனவர்களின் உழைப்பும் தியாகமும் எத்தகையது என்பதை உணர்த்துகிறதல்லவா!

ஆம், மனிதம் போற்றிய தமிழக மீனவர்களுக்கு கேரளாவில் நல்ல மரியாதை கிடைத்துள்ளது.

# மதம் கடந்த மனிதம்...

**கேரளாவில் மழை பேரழிவைக் கொண்டு வந்து பலரை நிலைகுலைய வைத்துவிட்டது. என்றாலும் அந்த துன்பகர மான வேளையிலும் சில நெகிழ்ச்சியான நிகழ்வுகள் நடந் திருப்பதை யாரும் வாழ்க்கையில் மறந்திடல் இயலாது.**

இடுக்கி அருகே, கனமழையால் வீடுகளை இழந்து நிவாரண முகாமில் தங்கியிருந்தபோது, இறந்த இந்து மதத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவரின் உடல் கிறித்தவ ஆலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. மதங்களைக் கடந்து மனிதநேயம் மலர்ந்த இந்தச் சம்பவம் அந்த பகுதியினரி டையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

முதியவரின் உடலைப் புதைக்க இடம் கிடைக்காமல் அவருடைய உறவினர்கள் தவித்தனர். இந்தநிலையில் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்ப்பதற்காக கிறித்தவ தேவாலயப் பாதிரியார் ஷின்டோ என்பவர் வந்தார். அவரிடம் இச்செய்தியைக் கூற, பாதிரியார் ஆலய வளாகத்திலேயே முதியவரின் உடலைப் புதைக்க உதவினார். இச்செயலைப் பாராட்டாதார் யாரும் இல்லை.

**– சைதை மணிமாறன்.**

# ஏமாற்றினாரா பாலசுப்ரமணியன் ஆதித்தன்?



சென்னை, சைதாப்பேட்டையில் வசிக்கும் யி.பொன்சிங் அவர்கள் 2007ஆம் ஆண்டு பெருங்குடியில் இருந்த தனது நிலத்தை தினத்தந்தி அதிபர் திரு. பாலசுப்ரமணியன் ஆதித்தன் அவர்களுக்கு ஒன்றரைக் கோடிக்கு பேசி விற்றுள்ளனர். இந்த விற்பனை நடவடிக்கையை சைதை துரைசாமியே நேரடியாக மேற்கொண்டிருக்கிறார்.

இதில் சைதை துரைசாமி மனைவியின் அக்காள் மகனான திரு. பிரேம் அவர்கள் சாட்சி ஒப்பம் இட்டிருக்கிறார். (இவர் சைதை துரைசாமியின் நிர்வாகத்தின் அனைத்து கணக்கு வழக்குகளைநிர்வகிப்பவர்) திருபாலசுப்ரமணியன் ஆதித்தனுக்கும் சைதைதுரைசாமிக்கும் இணக்கமான நட்புறவு இருந்து வருவதாக பலரும் கூறுகிறார்கள்.

பேசப்பட்ட ஒன்றரைக்கோடியில் ரூபாய் முப்பது இலட்சங்கள் மட்டும் வரைவோலையாக திரு. யி. பொன்சிங் அவர்களுக்கு, வாங்கிய தரப்பு கொடுத்து விட்டு, மீதம் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் இழுத்தடித்திருக்கிறார் பாலசுப்ரமணியன் ஆதித்தன். ஆறு மாதங்களுக்குப் பிறகு நான்கரைக் கோடிக்கு யி. பொன்சிங் நிலத்தை வேறு ஒரு நபருக்கு விற்றிருப்பது அறிந்த யி. பொன்சிங் தனக்குச் சேரவேண்டிய ஒருகோடியே இருபது இலட்சத்தைக் கேட்டிருக்கிறார். ஆனால், பணம் கொடுக்கப்படவில்லை.

இதுபற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போதும் எந்த பயனும் இல்லை. புகாரைப் பெற்றுக் கொள்ளவே காவல் நிலையம் தயாராக இல்லை. பணம் கொடுக்காமல் இருந்ததோடு மட்டுமல்லாது திரு. யி.பொன்சிங் அவர்களை, நிலம் வாங்கிய தரப்பு மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மற்றுமொரு வேதனை திரு. யி. பொன்சிங் அவர்களுக்கு. யாதெனில், வருமானவரி துறையில் இருந்து நிலம் விற்று பெற்ற பணத்திற்கு வரி கட்டச் சொல்லி அறிவிக்கை வந்திருக்கிறது. வருமானவரித்துறையினருக்கு பயந்து திரு. யி. பொன்சிங் அவர்கள் தன் கையில் இருந்த சொற்ப பணத்தைக் கட்டியிருக்கிறார்.

முழுவதையும் கட்ட வேண்டும் என்று கூறி, திரு. யி. பொன்சிங் அவர்களின் வங்கிக் கணக்கையும் வருமானவரித்துறை முடக்கி விட்டது.

மிகவும் இக்கட்டான, வேதனையான சூழலில் நீதிமன்றத்தை நாடியிருக்கிறார் திரு. யி. பொன்சிங். சில ஆண்டுகளுக்குப்பின் ஆலந்தூர் குற்றவியல் நீதிமன்றம், பாலசுப்ரமணியன் ஆதித்தன் மீது இ.த.ச.420 சட்டப்பிரிவின்படி மோசடி வழக்குப் பதிவு செய்து நவம்பர் ஒன்றாம் தேதி (01/11/2018) பாலசுப்ரமணியன் ஆதித்தன் நீதிமன்றத்தில் நேர்நிற்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. ●

**GOVERNMENT OF INDIA**
**INCOME-TAX DEPARTMENT**

| | | |
|---|---|---|
| 1 | Name of the Assessee | Shri Pon Singh |
| 2 | Address | 32, Jeenis Road<br>Saidapet<br>Chennai-15 |
| 3 | PAN No. | AEIPP1065N |
| 4 | Ward/Circle/Range | ITO, Non-Corporate Ward 14(3) Chennai |
| 5 | Status | Firm |
| 6 | Assessment Year | 2008-09 |
| 7 | Whether Resident/Resident but Not Ordinarily Resident/ Non-resident | Resident |
| 8 | Method of Accounting | Mercantile System |
| 9 | Previous year | 2007-08 |
| 10 | Nature of Business | Sale of household items & grocery items |
| 11 | Date(s) of hearing | 20-8-2013, 7-10-2013,6-1-2005, 9-3-2015, 16-3-2015, 20-3-2015, 19-1-2015, 29-1-2015 9-2-2015, 2-3-2015, 26-3-2015 |
| 12 | Date of order | 30.03.2015 |
| 13 | Section and subsection under which the assessment is made | 143(3) r.w.s.147 of the Income tax Act, 1961 |

**ASSESSMENT ORDER**

The above assessee is Proprietor of a grocery shop by name Ponmani & Co and a shop for house hold articles by name Ponmani Distributors and also deriving rental income. He has filed his return of income for the said assessment year on 29-9-2008 admitting total income of Rs.4,89,832/- and the same was processed u/s. 143(1) on **12.03.2014** accepting the returned income.

2. Subsequently, it was found that the assessee sold 33 cents of land at Perungudi during the accounting period relevant to the asst.year 2008-2009 for a sale consideration of Rs.30,00,000/- , the guideline value of the same is Rs.1,44,80,376/-. As per the provisions of section 50C of the Incometax Act, this value is to be deemed sale consideration received by the assessee and hence the capital gain chargeable to tax of Rs.1,06,55,700/- has escaped assessment in terms of section 147 of the Incometax Act. Therefore, Notice u/s 148 was issued to the assessee on 5-8-2013. In response to this notice, the assessee's representative filed a letter

3. Therefore, the AR of the has not raised any fresh objection and also not furnished any supporting documents in respect of his claim. Hence, the fair market value estimated by the DVO i.e Rs,1,44,57,700/- . is taken as the sale consideration for the property at Perungudi and short term capital gain is worked out as under:

Purchase Cost of Perungudiland Rs. 38,02,000/-
Sales consideration as discussed above Rs1,44,57,700/-
Short term capital gain Rs.1,06,55,700/-
This is added to the total income of the assessee.

Hence the assessment is completed adding the above.

Assessed Income : Rs.1,11,45,532/-

Demand should be paid as per calculation sheet enclosed.

Penalty proceedings u/s 271(1(c) will be initiated separately.

Encl.: Demand Notice and Penalty Notice

(E. KALAISELVI)
Income-tax Officer
Non-Corporate Ward 14(3), Chennai

INCOME TAX OFFICER
Non-Corporate Ward-14 (3), Chennai-34.

Copy to: The M.R.

ஆசிரியர்கள் இந்த சமுதாய வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு காரணம் பெற்றோர். அவர்களின் மன வளர்ச்சிக்கு காரணம் அவர்கள் இந்த சமுதாயத்தில் எதிர்கொள்ளும் இன்னல்களும் சுற்றுச்சூழலும்தான். ஆனால் மனவளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் அப்பாற்பட்டே பகுத்தறிவுத் திறனும் இன்னல்களை கையாளும் முறைகளையும் சிறு வயதில் இருந்த பயத்துடன் கூடிய மரியாதையுடன் பார்க்கப்படும் ஆசிரியர்களிடம் இருந்தே கற்றுக் கொள்கின்றனர். தங்களுடைய முன்னோடியாகப் பார்க்கப்படும் ஆசிரியர்களை ஏன் அவர்கள் வாழ்க்கையின் சிற்பி என்று அழைக்கக்கூடாது?

மாணவர்கள் தாங்கள் நித்திரை கொள்ளும் நேரங்களைத் தவிர, நாட்களின் நான்கில் இரண்டு பகுதியைத் தங்கள் ஆசிரியர்களிடமே செலவிடுகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் தங்கள் வாழ்நாளில் அவர்களின் ஏதோ ஒரு பேச்சால் அவர்களின் ஆழ் உணர்வைத் தொட்டு விட்டதைப் போல உணர்ந்து அவர்களை ஒரு சாதனை கதாநாயகனாகவும் கதா நாயகியாகவும் சித்தரித்து அந்த கதாபாத்திரங் களாகவே தங்களை வெளிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றனர். அது மட்டுமல்ல எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த ஆசிரியர்களை உதிர பந்தமில்லாத பெற்றோராகவே கருதுகின்றனர்.

ஆசிரியப் பணியே பல உயரிய பணிகளை உருவாக்குகின்றன. ஊன் உயிரெல்லாம் கடந்த நாடி நரம்புகளில் ஊறிப்போன அறம் செய்ய விரும்பு! ஆறுவது சினம், இன்றும் நுனிநாக்கில் தாளமிடுவ தற்குக் காரணம் அன்பான நம் பலியப் பருவ ஆசிரியர்கள். இன்று அல்ஜிப்ராவும் அனாலிட்டிகள் ஜியோமன்ட்ரியும் கற்றுத் தராத நன்னெறிகளை தங்கள் வாழ்கை அனுபவங் களோடு கலந்து கூறி இப்படித்தான் வாழ வேண்டு மென்று பாதை வகுத்துத் தந்திருக்கிறார்கள் ஆசிரியர்கள்.

# ஆசிரியப் பணி இறைப் பணி!



மண்ணில் விளைந்த பல சாதனையாளர்களுக்கு வித்திட்டது ஆசிரியர்கள்தான். ஒரு செடி வளர விவசாயி அவ்வப்போது மண்ணிற்கு உரம் சேர்ப்பது போல ஆசிரியர்கள் கல்வியை மாணவர்களுக்கு அவ்வப்போது புகட்டி அறுவடைக்கு தயாராக்கு கின்றனர். மாணவர்களை தாங்கள் யார் என்பதை வெளிக்கொணர வைப்பது ஆசிரியர்கள்தான்.

ஆசிரியர்கள் தங்கள் பாடங்களை கற்றுக் கொடுப்பது மட்டுமில்லாமல் அவர்கள் மாணவர் களின் பண்பு நலனிலும் அக்கறை கொள்கின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றனர்.

வியப்பூட்டும் பல விசயங்களைக் கற்றுத் தருவது ஆசிரியர்கள் மட்டுமே. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் திறமைகளை முன் கூட்டியே அறியும் ஆற்றல் உடையவர்கள். உலகத்தையே திரும்பிப் பார்க்கச் செய்த விஞ்ஞானிகளாக இருக்கட்டும், திரைப்பட நடிகர்களாக இருக்கட்டும் அவர்கள் தங்களின் வெற்றியை அடைந்ததற்குக் காரணம் என்று ஒரு ஆசிரியரையாவது குறிப்பிடுவார்கள்.

டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு ஆசிரியராக இருந்துதான் இந்தியாவின் உயர்ந்த பதவியான குடியரசுத் தலைவர் ஆனார். அன்னாரின் பிறந்த நாளையே நாம் இன்று ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். ஆசிரியர்கள் நம் நாட்டில் மிகவும் முக்கியமானவர்கள். அதனால் ஆசிரியர்களைப் போற்றுவோம்! வணங்கு வோம்!!

**சி. நீனு**
கல்லூரி மாணவி.

# படைப்பாளர் ஒரு பார்வை



இயற்பெயர் சே. அப்துல் லத்தீப், நீரை அத்திப்பூ என்ற புனை பெயரை வைத்துக் கொண்டவர். நாகை மாவட்டம், திருக்குவளை வட்டம், நீர்முளை ஊரில் பிறந்தவர். இளங்கலை அறிவியலில் முதுகலைப் பட்டம் தமிழில் பெற்றவர். இந்திய அரசின் அஞ்சல் துறையில் 39ஆண்டுகள் பணியாற்றி மதுரை அஞ்சல் பயிற்சி மைய உதவி இயக்குநராக பணிநிறைவு பெற்றவர். தற்போது 'தகவல் முத்துக்கள்' என்ற இதழை நடத்தி வருகிறார்.

வண்ணஒளி, எண்ண அலை, சின்னவரி, பாடி விளையாடு பாப்பா, குறுஞ்செய்திக் கவிதைகள், அஞ்சல்தலை அரி(றி)ய பாட்டு, நிலவுக்கே போகலாம், அறிவியல் கற்க அற்புதப்பாடல்கள், இதழ்கள் ஏந்திய மலர்கள், மறுபக்கம் (தொகுத்த கவிதை நூல்) குழந்தைக் கவிஞர் பாடல் பரம்பரை (இணைத் தொகப்பு) கலாம் பொன்மொழி கவிதை வரிசை என்று பல நூல்களை எழுதியுள்ளார்.

சங்கொலி, முல்லைச்சரம், கவிதை உறவு, தமிழ்ச் சிட்டு, பெரியார் பிஞ்சு, கவிதா மண்டலம், அமுதசுரபி, புதுகைத் தென்றல், அன்புப்பாலம், கோகுலம் உள்ளிட்ட எழுபதுக்கும் மேற்பட்ட இதழ்களில் எழுதியிருக்கிறார்.

இவர் பெற்ற சிறப்புகள்: புதுவை அரசின் பாவேந்தர் பட்டயம், தமிழ்க்கவிஞர் மன்றம் வழங்கிய கவிப்பேரொளி விருது, கவிதை உறவு வழங்கிய விக்கிரமன் விருது. அன்புப்பாலம் வழங்கிய சாதனையாளர் விருது, மன்னை பார்த்தசாரதி ட்ரஸ்ட் வழங்கிய தொகுப்புரைத் திலகம் விருது புதுக் கோட்டை இலக்கியப் பேரவை வழங்கிய பைந்தமிழ்ச் செல்வர், தொகுப்பாளர் திலகம், விருதுகள், வண்ணப்பூங்கா வழங்கிய எழுத்து இமயம் விருது, மனிதநேய அறக்கட்டளை வழங்கிய பாரதிதாசன் விருது, பாரதி நற்பணி மன்றம் வழங்கிய இலக்கியச் சுடர்மணி விருது, சென்னைக் கம்பம் கழகம் வழங்கிய தமிழ்நிதி விருது, சேலம் அட்சயா டிரஸ்ட் வழங்கிய தொகுப்புரைச் சிகரம் விருது, சிறந்த சிற்றிதழாளர் விருது, கண்ணிய இதழியல் விருது, சிராஜூல் மில்லத் கவிச்சுடர் விருது ஆகியவற்றுடன் கவிதைப் பௌர்ணமி, கவிச்செல்வர், இணைப்புரை இனியர், சிறுவர்சீர் பாவலர், அறிவியல் கவிஞர் போன்றவை புதுக்கோட்டை இலக்கியப்பேரவை இதழியல் செம்மல், என்ற விருதை அண்மையில் வழங்கியது.

வானொலியில் பல்வேறு ஊர்களில் பணியாற்றிய போது புதுடில்லி, சென்னை, புதுச்சேரி, திருச்சி, காரைக்கால் அரசு வானொலியிலும் அண்ணா பல்கலைக்கழக அண்ணா பண்பலை வானொலி எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக முத்துச்சரம் வானொலி, இலண்டன் பி.பி.சி. தமிழோசை வானொலி போன்ற வற்றிலும் சில தனியார் பண்பலை வானொலிகளிலும் கவிதை வழங்கல், இலக்கிய உரைகள், கலந்துரை யாடல், நாடக நடிப்பு, நாடக ஆக்கம் என்று பன்முகப் பங்கேற்பு 40 ஆண்டுகால வானொலி நாடக நடிகர், காரை வானொலி அறிவிப்பாளர் தேர்வுக்குழுவில் இருமுறை உறுப்பினர் என்று பலவற்றில் பங்கேற்றுள் ளார்.

டிடி1, பொதிகை அரசுத் தொலைக்காட்சி, சன், சன்நியூஸ், கலைஞர் தொலைக்காட்சி, மக்கள் தொலைக்காட்சி, விண் தொலைக்காட்சி, தமிழன் தொலைக்காட்சி ஆகியவற்றில் நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார்.

கவியரங்கத்தலைமை, பட்டிமன்ற நடுவர், சிறப்புரை, விழா இணைபுபரை உள்ளிட்ட நிகழ்வு களில் பல்வேறு அரங்கங்களில் பங்கேற்பு, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்ட எண்ணற்ற நிகழ்ச்சிகள் இணைப்புரை செய்தல் போன்ற அரங்கு நிகழ்வுகளிலும் பங்கேற்றிருக்கின்றார்.

தன்னம்பிக்கை வகுப்புகள், தலைமைப்பண்பு வகுப்புகள், கவிதைப் பயிலரங்கு ஆகிய நடத்தியிருக் கிறார்.



திட்ட வரைவாக்கங்கள், முனைவர் பட்ட ஆய் வேடுகள், மேதகு குடியரசுத் தலைவர் உரைகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த் திருக்கிறார்.

ஒன்பதாம் வகுப்பு பயிலும்போது கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்று, தொடர்ந்து பள்ளி, கல்லூரிகளில் இலக்கிய அமைப்புகளில் எண்ணற்ற பரிசுகள் பெற்றிருக்கிறார். சேலத்திலிருந்து வெளிவந்த சோலை இருசன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட சங்கொலி இதழில் இரண்டாம் கவிதையான இன்னொரு காதலி என்ற கவிதை முதன்முதல் அச்சில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து இதுவரை 70க்கும் மேற்பட்ட இதழ்களில் படைப்புகள் வெளிவந்துள்ளன.

கல்லூரி நாட்களிலேயே திருச்சி வானொலியில் கவிதைகள் வழங்கத் தொடங்கி இன்றுவரை பல வானொலிகளில் கவிதைகள் வழங்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டில் முதல் கவிதைத் தொகுப்பான வண்ண ஒளி எண்ண அலை சின்னவரி முதல் சிறுவர் பாடல் தொகுப்பான பாடி விளையாடு பாப்பா வெளிவந்தன. நூல்களை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளி யிட்டது. அவற்றைத் தொடர்ந்து இதுவரை பத்து நூல்கள் வெளிவந்துள்ளன. அனைத்தும் கவிதைகளும் சிறுவர் பாடல்களும்தான்.

கவியரங்கங்களில் தலைமைதாங்கியும் சான் றோர்கள் தலைமையில் கவிதை வழங்கியும் எண்ணற்ற அரங்குகளில் கவிதைகள் அரங்கேற்றம் பெற்றுள்ளன. மாண்பமை டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

**வண்ணஒளி, எண்ணஅலை, சின்னவரி, பாடி விளையாடு பாப்பா, குறுஞ்செய்திக் கவிதைகள், அஞ்சல்தலை அரி(றி)ய பாட்டு, நிலவுக்கே போகலாம், அறிவியல் கற்க அற்புதப்பாடல்கள், இதழ்கள் ஏந்திய மலர்கள், மறுபக்கம் (தொகுத்த கவிதை நூல்) குழந்தைக் கவிஞர் பாடல் பரம்பரை (இணைத் தொகப்பு) கலாம் பொன்மொழி கவிதை வரிசை என்று பல நூல்களை எழுதியுள்ளார்.**

உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள், மாநில முதல்வர்கள், மாநில, மத்திய அமைச்சர் பெருமக்கள், தமிழ்ச்சான்றோர்கள் பங்கேற்ற விழாக்களில் நிகழ்ச்சித் தொகுப்புரை கவிதை உணர்வில் வழங்கிப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

**உமா மகேஸ்வரி.**

# இந்திய மொழிகளில் முதன் முதலாக தமிழே கணினிப் பயன்பாட்டுக்கு வந்தது

தமிழ் எழுத்துருவை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். அதற்குப் பின்புலமாக இருந்தவர் முன்னாள் டொரான்டோ பல்கலைக்கழக பேராசிரியரான கணிதமேதை சி.விஜயகுமார் அவர்கள் ஆவார். இவர் சென்ற மாதம் டொரன்டோவில் காலமானார்.

1980களின் இறுதியில் இந்திய இராணுவத்துதோடு புலிகள் உக்கிரப்போரில் ஈடுபட்டிருந்தவேளை, புலம்பெயர் நாடுகளுக்கு விடுதலைப்புலிகளின் செய்திகளை மக்களுக்கு கொண்டு செல்ல தமது கிளைகள் ஊடாக புலிகள் செய்தி ஏடுகளை நடத்தி வந்தனர்.

போர்ச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட முன்னைய அச்சமைப்பு வேகம் போதாமல் இருந்த காரணத்தால் புலிகள் புதிய முயற்சிகளில் இறங்கினர். அப்போதுதான் முனைவர் சி. விஜயகுமார் அவர்கள் தன்னிடம் இருந்த திட்டத்தை விடுதலைப்புலிகளின் கனடாப் பொறுப்பாளர் தொண்டைமானாறு குணம் அவர்களிடம் தெரிவித்தார்.

அத்திட்டத்திற்கு கணினிகள் மற்றும் உபகர ணங்கள் வாங்க பெரும் நிதி தேவைப்பட்டது. இத் திட்டத்தை விடுதலைப்புலிகளின் மத்தியக்குழு உறுப்பினரும் அனைத்துலகச் செயலகப் பொறுப் பாளருமான திரு. லோறன்ஸ் திலகர் அவர்களிடம் தெரிவித்து தலைமைப் பீடத்திடம் நிதி பெற ஆவன செய்தார் பொறுப்பாளர் குணம் அவர்கள்.

எழுத்துரு அமைக்க தமிழர் ஆர்வலர் குழு அமைக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் கனடிய அலுவலகத்தில் பணி நடைபெற்றது. வரைகலை கலைஞர்கள் திரு. பா. ஞானபண்டிதன், கரன் கிறாப் சசி, தவம்...போன்ற பலரின் உதவியோடு, சரஸ்வதி, ஔவை, கீதவாணி, பூபாளம், திருமலை, நாகந்தினி போன்ற எழுத்துருக்கள் அமைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கனடா நாட்டுக் கிளையின் வெளியீடான உலகத்தமிழர் ஏடே இவ்வெழுத்துக்கள் கொண்டு வெளிவந்த உலகின் முதல் கணினி அச்சேறிய தமிழ் ஏடு ஆகும்.

இவற்றுக்கெல்லாம் அறிவுக் கருவூலமாக இருந்தவர் முனைவர் சி. விஜயகுமார் அவர்கள் ஆவார்.

இவரின் மறைவு பேரிழப்பாகும். அன்னரின் பிரிவால் வாடும் குடும்பத்தினர் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்.

# ஒற்றை தலைவலியை விரட்டும் பெருங்காயம்

பெருங்காயத்தைக் கொண்டு ஒற்றைத் தலைவலிக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு டம்ளரில் வெந்நீர் எடுத்துக்கொண்டு அதனுடன் கால் ஸ்பூன் பெருங்காயம், உப்பு, அரை எலுமிச்சை பழச்சாறு சேர்க்கவும். இவற்றை கலந்து உணவுக்கு பின் குடித்துவர ஒற்றைத் தலைவலி சரியாகும்.

கடுமையான தலைவலி, வாந்தி, நடுக்கம், எரிச்சல் போன்றவற்றுக்கு காரணமான ஒற்றைத் தலைவலி இல்லாமல் போகும், குழந்தைபெற்ற தாய்மார்களின் வயிற்றில் அழுக்குள் தங்காமல் இருப்பதற்கான மருந்து தயாரிக்கலாம். இரண்டு பல் பூண்டு நசுக்கி எடுக்கவும். கால் ஸ்பூன் பெருங்காயம். நாட்டுச் சர்க்கரை சேர்த்து, கலந்து காலையில் சாப்பிட்டுவர கருப்பையில் அழுக்குகள் சேராமல் வெளியேறும். அழுக்குகள் வெளியேறாமல் இருந்தால் காய்ச்சல் ஏற்படும். பாதுகாப்பான மருந்தாக இது விளங்குகிறது.

பல் வலிக்கான மருத்துவம் குறித்து பார்க்கலாம். லவங்கம் ஒரு ஸ்பூன் எடுத்து பொடித்து நீரில் இட்டு காய்ச்சி அதிலிருந்து வரும் புகையை பற்களில் படும்படி காட்டுவதால் பல் வலி விலகிப்போகும்.

## தனது பிரசவத்துக்காக ஆஸ்பத்திரிக்கு சைக்கிள் ஓட்டிச்சென்ற பெண் மந்திரி

நியூசிலாந்து நாட்டில் தொழிலாளர் கட்சியின் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்த கூட்டணியில் உள்ள பசுமை கட்சியை சேர்ந்த எம்.பி.ஜூலி அன்னே ஜென்ட்டர், பெண்கள் நலத்துறை மந்திரியாக உள்ளார். இவர் ஆக்லாந்து நகரில் வசித்து வருகிறார். நிறைமாத கர்ப்பிணியாக இருந்த ஜூலி அன்னே, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசவ நேரம் நெருங்குவதை உணர்ந்தார்.

இதையடுத்து உடனடியாக வீட்டில் இருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டுச் சென்றார். அவரது கணவரும் வேறு ஒரு சைக்கிளில் அவருடன் சென்றார்.

ஆஸ்பத்திரிக்கு பத்திரமாக சென்ற ஜூலி அன்னேவுக்கு, மாலை அழகான ஆண் குழந்தை பிறந்தது.

இந்த ருசிகர பயணம் குறித்து ஜூலி அன்னே கூறுகை யில் காரில் எங்கள் உதவியாளர்களுக்கு இடமில்லை. அதனால் நானும், எனது கணவரும் தனித்தனி சைக்கிள் களில் ஆஸ்பத்திரிக்கு சென்றோம். அப்படி சென்றது எனக்கு நல்ல மனநிலையை தந்தது என்றார்.

மேலும், சைக்கிளில் சென்ற புகைப்படங்களையும் ஜூலீ அன்னே சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு உள்ளார். அந்த புகைப்படங்கள் வைரலாக பரவி வருகின்றன.

– எ. அமல்ராஜ்

## தமிழர் அதிகமாக வாழும் "ரீ யூனியன் தீவு"

தமிழ்நாட்டுக்கு பரிச்சயம் இல்லாத இடம் தமிழ் நாட்டில் பலர் கேள்விப்படாத இடம் ஆனால் தமிழர்கள் அதிக அளவில் வாழும் உலகப்பகுதி ஒன்று.

சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் வாழும் ரீயூனியன்!


சுமார் எட்டரை லட்சம் மக்கள் வாழும், இந்த ரீ யூனியன், என்கிற தீவு, ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு கிழக்கே – இந்துமகா கடலில் மொரீசியஸ் அருகே உள்ள, உலக வரைபடத்தில் ஒரு புள்ளியாகக் காணப்படும் ஒரு மிகச்சிறிய தீவு.

பிரான்ஸ் நாட்டிலிருந்து மிகத்தொலைவில் இருந்தாலும் கூட இது பிரான்ஸ் நாட்டின் நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு பிரெஞ்சுப்பகுதி. உலகில் தமிழர் மகிழ்ச்சியாக வாழும் இடங்களில் ஒன்று – இந்த ரீயூனியன் தீவு!

## கட்டிகள் குணமாக...

உடம்பில் தெரியும்படியாக இருக்கிற கட்டிகளை அகற்ற, ஒரு கைப்பிடி கல் உப்பை எடுத்து பருத்தித் துணிக்குள் வைத்துக் கொண்டு, தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடு செய்து, அதில் சிறிது நல்லெண்ணெய்விட்டு சூடாக்கி, கல் உப்பு முடிச்சை அந்த எண்ணெயில் வைத்து பொறுக்கு சூடு ஏற்படுத்தி வெளியில் தெரியும் கட்டிமீது வைத்து வந்தால் கட்டி கரைந்து விடும். அல்லது கல் உப்பை சட்டியில் போட்டு நன்றாக சூடுபண்ணி பின்னர் அதை ஒரு பருத்தித்துணியில் வைத்து கட்டிமேல் வைத்து சூடு கொடுத்தால் கட்டி கரையும்.

உடம்புக்கு உள்ளே இருக்கும் கட்டிகளை, மூளைக்கட்டி, இதய அடைப்புகள், சிறுநீர்க்குழாய் அடைப்புகள் ஆகியவற்றை நீக்க, தினம் ஒரு கமலா ஆரஞ்சுப்பழத்தை வாயிலிட்டு மென்று நன்கு கூழாக்கி சாப்பிட்டு வந்தால் உள்ளிருக்கும் கட்டிகள் கரைந்துவிடும்த. கட்டி இருக்கும் இடத்தில் லேசாக தட்டிக் கொண்டே இருந்தாலும் கட்டி கரையும். உணவு உட்கொள்ளாமல் இருந்தாலும் கட்டி கரையும்.



## லிங்கன் சொன்ன யோசனை

ஆபிரகாம் லிங்கனிடம் ஒருவர் புகார் செய்தார், "எனக்கு ஒருவன் சகிக்க முடியாத துன்பம் இழைத்துவிட்டான். அந்தத் துன்பத்தை என்னால் மறக்கமுடியவில்லை." அதைக்கேட்ட லிங்கன், "நீங்கள் ஏன் அவருக்கு ஒரு கடிதம் எழுதக்கூடாது? எவ்வளவு கடுமையாக எழுத முடியுமோ அவ்வளவு கடுமையாக எழுதுங்கள்" என்று கூறி அனுப்பிவைத்தார். அவரும் தனக்கு துன்பம் இழைத்தவருக்கு காரசாரமாகக் கடிதம் எழுதி அதை லிங்கனிடம் எடுத்து வந்தார். நீங்கள் சொன்ன படி கடுமையாக எழுதி இருக்கிறேன்.

இதை தபாலில் போட்டுவிடவா? " என்று கேட்டார். அதற்கு லிங்கன், "எழுதிய வரை சரி, தபாலில் சேர்க்க வேண்டாம். அதைக் கிழித்து எறிந்துவிடுங்கள், நடந்ததை மறந்து விடுங்கள், அவரை மனமார மன்னித்துவிடுங்கள். உங்கள் சுமை குறைந்துவிடும்" என்று கூறினார்.

தமிழ்நாட்டில் இன்னும் அந்நியனின் போர்த்திறனை வியந்து நம் ஒப்பற்ற அரசர்களின் திறனை மறந்தும் மறைத்தும் வாழ்ந்து கொண்டி ருப்பது பெரும் வியப்பே...

கிரேக்க மன்னன் அலெக்சாண்டர், பிரான்சின் நெப்போலியன், கலிங்க மன்னர் அசோகர், முகலாய மன்னர் அக்பர் இவர்களை விட போர்த் திறன் அரசியல் சாணக்கியம், கலை, இலக்கியம் என அனைத்திலும் சிறந்து விளங்கி வரலாற்றில் மறைந்த, வட இந்திய அரசால் வரலாற்றில் மறைக்கப்படும் ஒப்பற்ற தேசங்களை ஆண்ட மன்னன், இங்கு இருக்கும் ஒவ்வொருவனும் மார் தட்டிக்சொல்லி கொள்ள வேண்டிய ஒரு தமிழன், இந்த இராஜேந்திர சோழன், இவனின் காலடிக்குக் கூடத்தகுதி அற்றவர்களை மாவீரர்கள் என புகழ்ந்துகொண்டு இருக்கிறோம்..

இவ்வாண்டிலிருந்து சரியாக 1000வருடத்திற்கு முன்பு உலகின் கால் பகுதிகளை தன் காலடியில் வைத்திருந்த மாமன்னன் இராஜேந்திர சோழன், சோழப் பேரரசின் தனி பெரும் மன்னனாக முடி சூட்டிபட்டான்.

இவனது போர்ப் படையில் 12 லட்சம் வீரர்களில் இருந்து 14 லட்சம் வீரர்கள், லட்சத்திற்கும் மேற்பட்ட குதிரைகள் 50,000க்கும் மேற்பட்ட யானைகள் இருந்துள்ளன. இப்படை வீரர்களின் எண்ணிக்கை தற்போதுள்ள இந்திய ராணுவத்தின் எண்ணிக் கைக்கும் அமெரிக்க ராணுவதின் எண்ணிக்கைக்கு இணையானது. கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் படையில் இருந்தோர் 1 லட்சத்துக்கும் குறைவான வர்களே.

# மாவீரன் ராஜேந்திர சோழன்



தரை வழியாக, தற்போதுள்ள கேரளம், ஆந்திரா, ஒரிசா, பீகார், மேற்கு வங்கம், தெற்கு கர்நாடகம், வங்க தேசம் ஆகிய பெயர்களை கொண்ட பகுதிகளையும், கடல் வழியாக, இன்றைய இந்தோ னேசியா, மலேசியா, ஆகிய நாடுகளை காலடியில் வைத்து இருந்தான். இவரின் கடாரப் படையெடுப்பின் கப்பல் படையை சற்று கற்பனை செய்து பாருங்கள். எத்தனை எத்தனை ஆயிரம் மைல்கள், எத்தனை கப்பல்கள், எவ்வளவு மனித முயற்சி தேவைப்பட்டு இருக்கும். மனித இயந்திரங்கள், பாய் மரக் கப்பல்களை கொண்டு இத்தனை நாடுகளை வென்ற உலகின் முதற்பெரும் மன்னனாவான்.

இராஜேந்திரன் தனிப் பெரும் மன்னனாக முடி சூட்டிக் கொள்ளும் பொழுது அவருக்கு வயது 50 ஆக இருந்திருக்கும் என கருதப்படுகிறது. கப்பற்படைக்கு தலைமை ஏந்தி கடாரம் (இந்தோனேசியா) செல்லும்

பொழுது இவனின் வயது 61. அறுபது வயதிலும் இளைஞனுக்கு உரிய மனித நிலையில் இருந்துள்ளார்.

கங்கை படையெடுப்பின் போது, கங்கை ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மறு முனைக்கு எப்படிச் செல்வது என்று புரியாமல் இருந்த போது, இவனது படையின் நூற்றுக்கணக்கான யானைகளை வரிசைப்படுத்தி, லட்சக் கணக்கான வீரர்களை மறுமுனைக்கு கொண்டு சென்றனர்.

கங்கை படையெடுப்பில் வென்ற பிறகு தோற்ற மன்னர்களின் தலையில் கங்கை நீர் குடங்களை வைத்து சோழ நாடு முடிய அவர்கள் நடத்தியே கொண்டுவரப்பட்டனர். இப்படையெடுப்பின் போது வங்கத்தை ஆண்ட புகழ் மிக்க மன்னன் மகிபாலனை பெரும் போரிட்டு வென்ற பெருமைக்குரியது இவரின் படை.

கங்கையில் கொண்ட புனித நீரினைக் கொண்டு தலை நகரான சோழபுரத்தை உருவாக்கியதால் அது கங்கை கொண்ட சோழபுரம் என்று அழைக்கப் பட்டது. பின்னாளில் அதுவே, அதிக ஆண்டுகள் (சுமார் 240 ஆண்டுகள்) ஆண்ட சோழர்களின் தலை நகரானது (சுமார் 240 ஆண்டுகள்)

கங்கை படையெடுப்பின் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி பாண்டிய மன்னன் ஒரு பெரும் படையினைத் திரட்டிக் கொண்டு சோழ தேசம் நோக்கி வருகிறான். இதனை அறிந்து ராஜாதிராஜன் அவர்களுடன் போர் புரிய ஒரு படையுடன் செல்கிறான். சோழன் வருவதை கேள்வி பட்ட பாண்டியன் தனது மீன் கொடியை சுருட்டி கொண்டு ஓடினான். இதுவே இந்நாளில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள மீன்சுருட்டி என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு செவிவழி செய்தியாகும்.

முகமது கஜினி அதிஉத்வேகத்துடன் வட இந்தியா நோக்கி படையெடுத்த கால கட்டம் அது. அப்போரில் வட இந்திய மன்னர்கள் ஒரு சேர நின்று கஜினியை தோற்கடித்தனர் இப்போரில் ராஜேந்திரசோழன் ஒரு பெரும் படையை வட இந்திய மன்னர்களுக்கு நட்புரீதியாக அனுப்பி வைத்தான். தோற்ற பிறகு முகமது கஜினி சென்ற இடம் வரலாற்று புகழ் பெற்ற சோமநாதபுரம்.

பெரும் மனித உழைப்பை கொண்டு நீர்ப் பாசனத்திற்காக இந்த நாட்டிலே மிகப்பெரிய ஏரியை 25 கி.மீ நீளமும் 6.5கி.மீ அகலமும் கொண்ட ஏரியை உருவாக்கினான். இதனை கங்கைகொண்டு புனித மாக்கப்பட்டதால் இது சோழசங்கம் எனப்பட்டது. இது இப்போது மண்ணால் மூடப்பட்டுள்ளது, பொன்னேரி எனப்படுகிறது.

ராஜேந்திர சோழன் கட்டிய கோவில்களின் எண்ணிக்கை 32. இதில் கங்கை கொண்ட சோழபுரம், ஈழம், ஆந்திரா, கர்னாடகா ஆகிய இடங்களில் கட்டிய கோவில்களும் அடங்கும்.

வாயுக் கடவுளுக்காக ஆந்திராவில் கட்டப் பட்டுள்ள புகழ் வாய்ந்த காளஹஸ்தி திருக்கோயில் இவன் ஆட்சியில் தான் முழுவடிவம் பெற்றது.

பொன்னியின் செல்வன், படிச்சவங்க எல்லாம் வந்தியத்தேவன ஒரு கதா பாத்திரமாக நினைத்து இருப்பீர்கள். ஆம், அவன்தான் இவனுடைய ஆட்சி யிலும் முதன்மைத் தளபதியாக விளங்கியவன் தனது அத்தை கணவன் வல்லவராயன் வந்தியத்தேவன்“

தனது மகன் ராஜாதிராஜனுக்கு இளம் வயதிலே முடி சூட்டி, தந்தையும் மகனும், 26 ஆண்டுகள் சேர்த்து ஆட்சி புரிந்தனர். இவனது ஆட்சியில் பின்னாளில் ராஜாதிராஜனே பல போர்களுக்கு தலைமை புரிந்தான்.

வட இந்தியா, இலங்கை, பாரசீகம், அரேபியம், சீனா, ரோம், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு வைத்து இருந்தான்.

கடார படையெடுப்பினை பற்றி நிலவும் பல கருத்துகளில் ஒன்றாக, அங்கு வாழ்ந்து வணிகத்தில் ஈடுபட்டுவந்த தமிழர்களுக்கு விசய பேரரசால் வந்த இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தனது செல்வாக்கினை, தனது படை வலிமையை அங்கு காட்டும் பொருட்டு தனது படையெடுப்பினை நிகழ்த்தி வெற்றி கொண்டான். இவரது வெற்றிக்குப் பரிசளிக்கும் விதமாக கம்போடிய மன்னன் தமிழன் சூரிய வர்மன் ராஜேந்திர சோழனின் தாய் பெயரில் கம்போடியாவில் கோவிலை ஏற்படுத்தினான்.

ராஜேந்திரன் தன்னைச் சுற்றி அனைத்து போர் திறன்களும் அறிந்த, கடும் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட ஓர் போர் குழுவினவரை தன்னுடைய நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் வைத்து இருந்தான்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த இவனு டைய அரண்மனை மாளிகையின் பரப்பளவு 1.6 கி.மீ. மேலைச் சாளுக்கியர்களிடம் நிலவி வந்த கொடும் பகையினாலும், கீழைச் சாளுக்கியம் அவர்கள் வசம் செல்லாமல் இருப்பதற்கும். சாணக்கியத் தனமாக கீழைச் சாளுக்கியரை தன் வசப்படுத்த தனது மகள் அங்கம்மாளை தனது தமக்கை மகன் கீழைச் சாளுக்கிய இளவரசன் ராஜராஜ அரியனிற்கு திருமணம் செய்து வைத்து, பின்னாளில் அவனையே மன்னனாக்கி, மேலை சாளுக்கியருக்கு எதிராக மூன்று முறை பெரும் களம் கண்டு பெரும் வெற்றி கண்டான்.

அந்தமான் தீவில் மலை உச்சியில் ராஜேந்திரன் பற்றிய கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்தால் மேலும் பல தகவல்கள் கிடைக்கும்.

ராஜேந்திர சோழனின் கப்பற்படை திறனைப் பாராட்டி கவுரவிக்கும் பொருட்டு இந்திய கப்பற்படை பயிற்சிக் கப்பலுக்கு இந்திய அரசு TS Rajendra என்று பெயர் சூட்டியுள்ளது.

என்னதான் இது பொற்கால ஆட்சி என்று சொன்னாலும் குறைகள் இல்லாமல் இல்லை. இவனது ஆட்சியிலும் அடிமை முறை, தேவதாசி முறைகள் பின்பற்றப்பட்டன. சாதி கட்டமைப்புகள் இருந்தன. ஆனால் தீண்டாமை இல்லை.


கி.பி. 910 முதலாம் பராந்தகச் சோழன் பெரும் படையும் பாண்டிய மன்னன் இராச சிம்மனின் பெரும் படையும் வெள்ளூர் எனும் இடத்தில் பெரும் போர் புரிந்தனர். போர் என்றால் அப்படி ஒரு போர். போரின் முடிவில் சோழன் பெரும் வெற்றி கொள்கின்றான். பாண்டிய நாட்டை முடி சூட்டிக் கொள்ள வந்த சோழனுக்கு பெரும் அதிர்ச்சி, பாண்டியன் இராச சிம்மன் இந்திர ஆரத்தையும் மணி முடியையும் போரில் உதவிய சிங்கள மன்னனிடம் கொடுத்துவிட்டு சேர நாட்டுக்கு தப்பி ஓடிவிட்டான்.

கடுங்கோபமடைந்த பாராந்தகச் சோழன் ஒரு பெரும் படையினை இலங் கைக்கு அனுப்பி இலங்கையை வென்றான். ஆனால் இந்திர ஆரத்தையும், மணி முடியையும், கண்டறிய முடியவில்லை. ஆண்டுகள் கழிந்தன, மன்னர்கள் பலர் வந்துசென்றனர். ஏன் ராஜராஜ சோழனால் கூட கைப்பற்ற முடியவில்லை. சரியாக 107 ஆண்டுகள் கழித்து இராஜேந்திர சோழன் ஒரு மிகப்பெரும் படையுடன் இலங்கைக்குச் சென்று, முழு இலங்கை யையும் துவம்சம் செய்து இலங்கை மன்னன் 5ஆம் மஹிந்தனை வென்று இந்திர ஆரத்தையும், மணி முடியையும் கைப்பற்றி, சோழ நாடு வந்த வேந்தன் இந்த சோழன்.

இராஜேந்திர சோழனும் சைவ நெறியையே பின்பற்றினான். தன்னுடைய ஆட்சியில் பிற சமயங் களுக்கும் சைவ சமயத்திற்கு கொடுத்த முக்கியத் துவத்தையே கொடுத்து வந்தான். எந்த நேரத்திலும் தான் சார்ந்த சமயத்தையோ, மொழியையோ, யார் மீதும் திணிக்கவில்லை.

இராஜேந்திரன் இறந்தவுடன் அவனிடம் இருந்த தீராத அன்பினால் அவன் மனைவியுள் ஒருத்தியான வீரமாதேவியும் உடன் இறந்ததால், பின்னாளில் இந்த இடத்தில் நீர்ப் பந்தலை அமைத்த அவளின் சகோதரன் சேதுராமன் மதுராந்தகன் அவ்வழியில் செல்வோர்க்கு நீரினை கொடுத்து வந்தான்.

●



# எங்கே சென்றாய் தலைவா!

தலைவா வா, எங்கே சென்றாய்?
ஏன் சென்றாய்? உன் மீளா
தூக்கத்தால் எழை மக்கள்
மாளாத ஏக்கத்தில் தவிக்கின்றனர்
உன் பிறப்பு மனித குலத்தின் மகிமை
பார் போற்றும் பன்மகத் தலைவா!
ஏன் உன் முகம் மறைத்தாய்
தொழிலாளர்களின் தோழரே!
ஏழைகளின் ஏந்தலே!
கலை கவிதை இலக்கியம்
ஆட்சிக் கட்டிலில்
உன் சாதனையை மிஞ்சியவர் யார்?
முக்கனியின் ரசம் முத்தமிழின்
பொக்கிசம்
மூவேந்தரின் அம்சம் நீ!
வருங்கால தமிழகம் வளம் பெற
சிந்தித்து செயல்பட்ட தலைவரே!
தமிழ் உலக சூரியனே உன் மறைவை
அறிந்து வானுலகச் சூரியனும்
வருத்தம் கொண்டு வடிவம் மாறியதே!
உயிர்த் தலைவா உன் உடன் பிறப்புகளை
மறந்து விட்டு மறைந்து விட்டாயே!
உயிரெடுத்து வா உன்முகம் காண
உன் குரலைக் கேட்க தவிக்கிறது
தமிழுலகம்!
பிறப்புக்கு பெறுமை சேர்த்தவரே!
உன்புகழ் என்றும் நிலைக்கட்டும்!

**பி.சி.சுப்ரமண்யம்,**
8190988466, 7299873079.

# 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள வைகை எக்ஸ்பிரஸ்




பயணிகள் சேவையில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் சுதந்திர தினத்தன்று தனது பிறந்தநாளை கொண்டாடியது. 1977ஆம் ஆண்டிலேயே 105 கி.மீ.வேகத்தில் சென்ற அதிவிரைவு ரெயில் இதுவாகும்.

தமிழகத்தில் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இன்றைக்கு அதிகம் இயக்கப்பட்டு வந்தாலும், வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலுக்கு தனி சிறப்புகள் உண்டு. மதுரைசென்னை இடையே இயக்கப்படும் இந்த ரெயில் 1977ஆம் ஆண்டு சுதந்திர தினமான ஆகஸ்டு 15ஆம் தேதி மதுரையில் இருந்து சென்னைக்கு தனது முதல் பயணத்தை தொடங்கியது.

ரெயில் பெட்டிகள் அப்போது மஞ்சள் மற்றும் பச்சை வர்ணம் பூசப்பட்டிருந்தன. கனடா நாட்டில் தயாரிக்கப்பட்ட 1,850 குதிரைத் திறன் கொண்ட ஒய்.டி.எம்.4.ஏ என்ற டீசல் என்ஜின் பொருத்தப்பட்டு இருந்தது. அந்த காலத்திலேயே மீட்டர்கேஜ் பாதையில் மணிக்கு 105 கி.மீ.வேகத்தில் சென்றது.

இந்த ரெயிலை இயக்குவதற்காகவே வேம்புடையான், வெங்கடாசலம் என்ற 2 டிரைவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது இந்தியாவில் அதிவேகமாக (மணிக்கு 100 கி.மீ) சென்ற ராஜஸ்தான் டெல்லி பிங்க் சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி முடிந்ததும் மதுரை திரும்பிய அவர்கள் வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலை நீராவி என்ஜினில் சோதனை செய்தபோது வேகம் கிடைக்காததால் டீசல் என்ஜினை பொருத்தி மணிக்கு 105 கி.மீ.வேகத்தில் இயக்கினர். எனவே வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் தனது முதல் பயணத்தை டீசல் என்ஜினுடையே தொடங்கியது. இதற்கான அனுமதியை லோகோ இன்ஸ்பெக்டர் சேவியர் வழங்கினார்.

## பயணிகள் சேவையில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் சுதந்திர தினத்தன்று தனது பிறந்தநாளை கொண்டாடியது. 1977ஆம் ஆண்டிலேயே 105 கி.மீ.வேகத்தில் சென்ற அதிவிரைவு ரெயில் இதுவாகும்.

ரெயிலில் தலா 8 முன்பதிவு மற்றும் முன்பதிவில்லாத பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன. ரெயிலை வேம்படையான், வெங்கடாசலம் ஆகிய இருவரும் மணிக்கு 105 கி.மீ.வேகத்தில் இயக்கி புதிய சாதனை படைத்தனர். அவர்களைப்போல பால்டேவிட் சாம் உள்பட 6 பேர் கொண்ட டிரைவர் குழுவினர் ஷிப்டு முறையில் அந்த ரெயிலை இயக்கினர். இன்றைக்கும் அதே 105.கி.மீ.வேகத்திலேயே இந்த ரெயில் இயக்கப்படுகிறது.

சென்னை ஐ.சி.எப்.தொழிற்சாலையில் வடிவமைக்கப்பட்ட ஏ.சி.பெட்டி முதல் முறையாக 1984ஆம் ஆண்டு இந்த ரெயிலில் தான் இணைக்கப்பட்டது. தெற்கு ரெயில்வேயில் நவீன ஜன்னல், கண்ணாடி ஜன்னல், டியூப்லைட் போன்ற வசதிகளும் இந்த ரெயிலில் தான் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதிகத் திறன்கொண்ட முதல் என்ஜின் இந்த ரெயிலில் தான் பொருத்தப்பட்டது. 1980ஆம் ஆண்டில் 2 குழல் கொண்டு ஒலியை எழுப்பும் ஹாரன்கள் இந்த ரெயிலில் மட்டுமே பொருத்தப்பட்டிருந்தது.

வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலை அப்போது இயக்கிய டிரைவர்களில் பால்டேவிட் சாம், லோகோ இன்ஸ்பெக்டர் சேவியர் ஆகியோர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தநாள் ஞாபகங்கள் குறித்து 85 வயதை கடந்த பால்டேவிட் சாம் கூறியதாவது:

1970ஆம் ஆண்டுகளில் தமிழக ரெயில்களின் சராசரி வேகம் மணிக்கு 70 முதல் 75 கி.மீ.தான் இருந்தது.இதுபோன்ற சூழ்நிலையில் தான் வைகை எக்ஸ்பிரஸ் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த காலத்தில் டோக்கன் சிக்னல் முறைதான் இருந்தது. டென்னிஸ் பேட் வடிவில் இருக்கும் டோக்கனை ஒரு ரெயில் நிலையத்தை ரெயில் கடக்கும்போது டிரைவர் தூக்கி எறிந்துவிட்டு, அந்த ரெயில் நிலையத்தில் வேறொரு டோக்கனை ஓடும் ரெயிலில் நின்றபடியே வாங்கிச் செல்ல வேண்டும்.

ஆனால் வேகமாக செல்லும் வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலில் அது முடியாது என்பதால், இதற்காகவே என்ஜினில் நவீனகருவி பொருத்தப்பட்டிருக்கும். இன்னும் குறைந்த நேரத்திற்குள்ளாகவே மதுரை சென்னை செல்ல முடியும், அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கூறினார்.

வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலின் ரசிகர் சென்னையை சேர்ந்த அருண் பாண்டியன் கூறும்போது, "சேத்துப்பட்டு பாலத்தில் இருந்து வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் அசுர வேகத்தில் புழுதியை கிளப்பிக்கொண்டு செல்வதை பார்க்கவே சந்தோஷமாக இருக்கும். இந்த ரெயிலின் பிறந்தநாளை ஒவ்வொரு ஆண்டும் எனது நண்பரும், இந்த ரெயிலின் முதல் டிரைவர் குழுவில் உள்ளவருமான பால்டேவிட் சாமின் மகன் கிறிஸ்டோபருடன் இணைந்து மதுரை ரெயில் நிலையத்தில் கேக் வெட்டி கொண்டாடுவது வழக்கம். அன்றைக்கு வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் பெட்டிகள் இருந்த மஞ்சள் பச்சை நிறத்திலேயே மீண்டும் வர்ணம் பூச வேண்டும் என்பது எங்கள் ஆசை என்றார்.

## விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தராக பெண்.

தமிழக கவர்னரும், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் வேந்தருமான பன்வாரிலால் புரோகித், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக்த்தின் துணை வேந்தராக ஷீலா ஸ்டீபனை நியமித்துள்ளார். இதற்கான பதவியேற்பு கவர்னர் மாளிகையில் நடந்தது. அப்போது கவர்னரின் கூடுதல் தலைமைச் செயலாளர் ஆர் .ராஜகோபால் உடனிருந்தார். ஷீலா ஸ்டீபன் பொறுப்பு ஏற்றதில் இருந்து 3 ஆண்டுகள் இந்த பதவியை வகிப்பார்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும். ஷீலா ஸ்டீபன் கல்வி மற்றும் ஆராய்ச்சி துறையில் நன்கு அனுபவம் பெறறவர். தேசிய மற்றும் சர்வதேச அளவில் இவர் 70-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி பதிப்புகளை வெளியிட்டுள்ளார். மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உடல் இயக்கத்தின் சிகிச்சை என்ற திறன்சார்ந்த ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திலும், தரமான உடற்கல்வித் திட்டத்தில் சர்வ தேச அளவிலும் முக்கிய ஆராய்ச்சி செய்துள்ளார்.

லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி அறிவியல் கல்வி நிறுவனம், அமெரிக்காவில் உள்ள ஸ்பிரிங்பீல்டு உடற்கல்வியில் கல்லூரி உள்பட 14 நாட்டு கல்விசார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியை அவர் உருவாக்கி இருக்கிறார். ஷீலா ஸ்டீபன் 110 பேர்களின் எம்.ஃபில்., 10 பேர்களின் பி.எச்.டி. ஆராய்ச்சி படிப்பை முடிக்க வழிகாட்டியாக இருந்துள்ளார்.

**க. பவானி.**

கேரளத்தில் கடந்த மே மாதம் முதல் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால் அங்கு மழை கொட்டியது. இதனால் அங்குள்ள 14 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்காக இருந்தது. மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 370க்கும் மேற்பட்டோர் பலியாகிவிட்டனர். மொத்தம் 54.11 லட்சம் பேர் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். இந்த சமயத்தில் மற்ற மாநில அரசுகள், தனிநபர்கள் என மொழி, மதம், இனம் கடந்த நிதியாகவும் நிவாரண பொருட்களாகவும் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் சக்ரபாணி மகராஜ் என்ற சாமியார் பிரிவினையை தூண்டும் வகையில் ஒரு கருத்தை தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், நானும் கேரளத்துக்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். ஆனால் அந்த உதவியானது. இயற்கை மற்றும் உயிரினங்களையும் யார் மதிக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே உதவி புரியவேண்டும்.

பசுவை வெட்டி அதன் இறைச்சியை உண்கின்றனர். அதனால் நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் யார் பசு இறைச்சியை உண்ணாமல் தவிர்க்கின்றனரோ அவர்களுக்கு மட்டுமே இந்துக்கள் உதவ வேண்டும். பசுக்களை வேண்டுமென்றே சாப்பிட்டும் பசுவை சாலையில் வெட்டியும் இந்து மதத்தை யார் வேதனை கொள்ள வைக்கின்றனரோ அவர்களுக்கு மன்னிப்பே இல்லை. பசுக்களை வதைத்ததால்தான் அந்த மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த பூமியில் யார் பாவம் செய்கிறார்களோ அவர்களை இயற்கை தண்டிக்கும்.

சாலைகளில் பசுக்களை வதை செய்தவர்களை கேரள மக்கள் தண்டிக்க வேண்டும். சில தவறான மக்களால் கேரளாவை இயற்கை தண்டித்து விட்டது. இதில் அப்பாவிகளும் பாதிப்புக்குள்ளாகி விட்டனர் என்றார். அவர் கேரளத்தில் பிரிவினையை தூண்டும் வகையில் இந்த சாமியார் பேசிய கருத்துகள் சர்ச்சைக்குள்ளா கியுள்ளன.

# மாட்டிறைச்சி சாப்பிடும் மக்களுக்கு இந்துக்கள் உதவ வேண்டாம்



# பாவேந்தர் ஓர் பல்கலைக்கழகம்



பாவேந்தர் பாரதிதாசன் 1957ல் பெங்களூரில் நடைபெற்ற குறள் மாநாட்டிற்கு தலைமையேற்றுப் பேசிய போதும் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சி!

கூட்டத்திலிருந்து திருநீறு பூசிய சைவர் ஒருவர் எழுந்து நின்று கேட்ட கேள்விகளும் அதற்குப் பாவேந்தர் அளித்த பதில்களும்.

கேள்வி: பெரியார் இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்கிறார். நடிகர் எம். ஆர். ராதா இராமாயணத்தை இழிவு படுத்தி கீமாயணம் நடத்துகிறார். இராமன் கடவுள் அல்லவோ? இவ்வாறெல்லாம் செய்வது முறையா?

பாவேந்தர் பதில்: நீர் உண்மையான சைவரா?

சைவர்: ஆமாம், அதிலென்ன ஐயம்?

பாவேந்தர்: சிவஞான சித்தியார் படித்திருக்கிறீரா?

சைவர்: படித்திருக்கிறேன் (மழுப்பலான பதில்)

பாவேந்தர்: அருள்நந்தி சிவாச்சாரியார் ஒரு வைணவனை முன்னிலைப்படுத்திக் கூறிய பாடல் தெரியுமா?

(அச்சைவருக்கு உதறல் எடுக்கத் தொடங்கி விட்டது)

பாவேந்தர்: "மாயை கடவுளுக்குக் கிடையாது. மாயையில் சிக்கி மாயமான் பின்னால் ஓடி, மனைவியை இழந்து தவித்த இராமன் கடவுள் ஆகமாட்டாரென்று சிவஞானசித்தியார் தெளிவாகக் கூறுகிறார்." என்று எடுத்துக் கூறிவிட்டு

கீழ்க்கண்ட அப்பாடலையும் பாடினார்.

'மாயமான் தன்னைப் பொய்மான்
என அறியாதரக்கன்
மாயையில் அகப்பட்டுத் தன்
மனைவியை இழந்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை
மதி கெட்டங்கவனைக் கொன்று
நாயனார் தமைப்பூசித்தான்
கொலைப்பழி நணுகிடாமே'

இவ்வாறு எடுத்துக்கூறி இராமன் கடவுளல்லன் என்பதற்குச் சைவர்கள் எல்லோரும் உயர்வாக மதித்துப் போற்றும் 'சிவஞான சித்தியாரில்' உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சான்றிருக்கிறது. அருள் நந்தி சிவாச்சாரியார் சுயமரியாதைக்காரரா? சைவ ஆக மங்கள் என்ன கூறுகின்றன? என்பதைத் தெரிந்து கொள்ளாமல் உடம்பெல்லாம் பட்டை பட்டையாத் திரு நீற்றைப் பூசிக் கொண்டு வந்தால் போதுமா? என்று சரமாரியாகப் பேசினார்.

கேள்வி கேட்ட சைவர் திணறிப்போய் செய்வதறியாமல் உட்கார்ந்து கொண்டார்.

நிகழ்ச்சி முடிந்து பாவேந்தர் மேடையை விட்டிறங்கியதும் கேள்வி கேட்டவரும் அவருடன் வந்த வேறு சில சைவர்களும் பாவேந்தரிடம் ஓடிவந்து, "ஐயா! உங்கள் புலமையை அறியாமல் நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டோம், எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினர்.

கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள் எழுதிய 'பாவேந்தர் ஓர் பல்கலைக்கழகம்' என்ற நூலிலிருந்து.

---

*தொகுத்தவர்: பீமபெருமாள், அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை 40. பேசி: 9500930460*



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# செந்தமிழ்நாடு ஊடகவியலார்கள் சங்கத்தின் அலுவலகத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு

# மலரஞ்சலியும் - புகழஞ்சலியும்




செந்தமிழ்நாடு ஊடகவியலார்கள் சங்கத்தின் அலுவலகத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தலைவர். விசவனூர். வே. தளபதி அவர்கள் தலைமையில் மலரஞ்சலியும் புகழஞ்சலியும் செலுத்தப்பட்டது. நிகழ்வில் பொதுச்செயலாளர் திரு. எஸ். ரங்கநாதன், இணைச்செயலாளர் திரு. மணிவண்ணன், அமைப்புச் செயலாளர் திரு. கனகராஜ், துணைத்தலைவர் திரு. பாலமுருகன், துணைச் செயலாளர் திரு. மோகன், திரு. கோபால், திரு. சுந்தரம், திரு. மணிமாறன், திருமதி. உமா மகேஸ்வரி, க. பவானி, செல்வி. எஸ்தர், திரு. சகாயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

MUTRAM - Tamil & English Monthly  RNI No. TNBIL/2010/36924.

சேர்வோம் உயர்வோம் !

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

அரசு பதிவு பெற்றது





விசவனூர்.வே.தளபதி
தலைவர்



எஸ்.ரங்கநாதன்.
செயலாளர்



எஸ்.வி.ஜெய்.இமயவரம்பன்
பொருளாளர்



கனகராஜ்
அமைப்புச்செயலாளர்

ஊடகவியலாளர்கள்
உரிமைகளைக் காப்போம் !

உலகம் வியக்க
ஒன்றாய்த் திரள்வோம் !

## செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உறுப்பினராகுங்கள், நமக்குரிய உரிமைகளையும்
சலுகைகளையும் வென்றெடுப்போம்.

செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்
எண் 124, என்.டி.ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி: 044-42154408, அலைபேசி : 8056281973.